பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 06 செவ்வாய்க்கிழமை (20.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 204

# இலங்கை விவகாரத்தில் இந்திய மத்திய அரசினது தலையீட்டைக்கோருகிறது ஆளும் தி.மு.க. கூட்டணி

கொழும்பு, ஜூன் 20

" இலங்கையில் அமைதி ஏற்படவும் அதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளவும் இந்திய மத்திய அரசு உடனே தலையிட வேண்டும்"

- இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை தமிழகத்தை ஆளும் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக் கட்சிகள் நிறைவேற்றியுள்ளன.

நேற்று மாலை தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தலைமையில் தி.மு.க. தலைமையகமான அறிவாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் ஆளும் கூட்டணிக் கட்சிகளான தி.மு.க., காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, திராவிடர் கழகம், மார்க்கிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் தலைவர்களும், முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் நோர்வே நாடு மேற்கொண்டு வந்த அமைதிப் பேச்சுகள் சுமுகமாக முடிவடைந்து அங்குள்ள மக்களின் வளர்ச்சிப் பணிகளுக்காக இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் அக்கறை காட்டுவர் என்ற எதிர்

(12ஆம் பக்கம் பார்க்க)

# போர் மூண்டால் எந்த உத்தியையும் கைக்கொள்வதற்குப் புலிகள் தயார்!

## தமிழ்ச்செல்வன் சூளுரை

கொழும்பு, ஜூன் 20

**யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சிகளை விட்டுவிட்டு தமிழர்கள் மீது கொடூரப் போர் ஒன்றை இலங்கை அரசு திணிக்குமானால், அதை எதிர்கொள்வதற்காகத் தற்கொலைத் தாக்குதல் உட்பட எந்த உத்தியையும் கையாள்வதற்கு - மேற்கொள்வதற்கு - புலிகள் பின்நிற்கவேமாட்டார்கள்.**

**- இவ்வாறு சூளுரைக்கும் விதத்தில் அடித்துக் கூறியிருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.**

'ரோய்டர்' செய்தி நிறுவனத்திற்குத் தாம் அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

தமிழ்மக்கள் மீது மற்றொரு கொடூர யுத்தத்தை ஸ்ரீலங்கா அரசு திணிக்குமானால் இலங்கைத் தீவு முழுமைக்கும் அது விளைவுகளை - பெரும் தாக்கத்தை - ஏற்படுத்தும்.

தமிழ்மக்கள் மீது அத்தகைய கொடூரமான போரைத் திணித்தால் தங்களைப் பாதுகாப்பதற்காக எந்த ஓர் உத்தியைப் பயன்படுத்தவும் தமிழ்மக்கள் பின்நிற்கமாட்டார்கள்.

தமிழர் தாயகத்திலிருந்து ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேறி யூற்ற மக்களைப் போல எமது மக்களுக்கும் இயல்பு வாழ்க்கை வாழ வாய்ப்புக் கிடைத்திருக்குமானால் இராணுவத்துடனான எமது மக்களினது அல்லது எங்களின் மோதல்கள் இடம்பெற்றிருக்கா?

இதனை சிங்களத் தரப்பு உணர்ந்திருந்தால்

(12ஆம் பக்கம் பார்க்க)

## குஞ்சர் கடையடியில் கிரனேட் வீச்சு! இளைஞர் காயம்

கரவெட்டி, ஜூன்20

வடமராட்சி, கரணவாய் குஞ்சர் கடைக்கு சமீபமாகப் பணியில் இருந்த படையினரை நோக்கி நேற்று மாலை 5.30 மணியளவில் கிரனேட் வீசப்பட்டது. இச்சம்பவத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

கிரனேட் வீசப்பட்டதை அடுத்துப் படையினர் பத்து நிமிடங்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதில் சில வீடுகள் சேதமடைந்தன.

கிரனேட் வீசப்பட்ட சமயம் அந்த வழியால் சென்ற மணிகலாதன் பிரகலாதன் (வயது 37 - கலட்டி, கரவெட்டி) வயிற்றில் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-70)

உதயன்

மாற்றப்பட்ட தொலைபேசி இலக்கங்கள்

| | |
|---|---|
| பழைய தொ.இல. | 222 2085 |
| | 222 2050 |
| புதிய தொ.இல. | 222 9955 |
| | 222 9944 |

## வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுக்கொண்டு மறுபுறத்தில் பேச்சுக்கு அழைப்பது கேலிக்கூத்து

### இலங்கை அரசுக்குப் புலிகள் தரப்பில் பதிலடி

கிளிநொச்சி, ஜூன் 20

"யுத்த நிறுத்த உடன்பாட்டை செம்மையாகக் கடைப்பிடித்து, முன்னைய இணக்கப்பாட்டின்படி துணைப் படைகளின் ஆயுதங்களைக் களைந்து, அவற்றை அகற்றுவதற்கு அரசுத் தரப்பு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கும் வரை அமைதிப் பேச்சுகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்புகளே இல்லை."

- இவ்வாறு விடுதலைப் புலிகள் தரப்பில் அடித்துக் கூறப்பட்டிருக்கின்றது.

இலங்கை அரசின் சமாதானச் செயலகம் நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கை ஒன்றில் விடுதலைப் புலிகளை அமைதிப் பேச்சுக்குத் திரும்பும்படி அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்பாளர்களுக்காக புதிய நாடுகளில் அவசரமாக ஆள் தேடும் நெருக்கடியில் நோர்வே!

கொழும்பு, ஜூன் 20

இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவில் கண்காணிப்பாளர்களாகப் பணியாற்றுவதற்காக புதிய நடுநிலை நாடுகளில் ஆள்களை அவசர அவசரமாகத் தேட வேண்டிய இக்கட்டில் அனுசரணைத்தரப்பான நோர்வே சிக்கியிருப்பதாகத் தெரியவருகின்றது.

தற்போது நோர்வே, ஐஸ்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த இருபது கண்காணிப்பாளர்களும் -

டென்மார்க், சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த 37 கண்காணிப்பாளர்களுமாக மொத்தம் 57 கண்காணிப்பாளர்கள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

நோர்ட்டிக் நாடுகளைச் சேர்ந்தோரை கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்துவதற்கு இலங்கை அரசும், புலிகளும் போர் நிறுத்தத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் கொல்லப்பட்ட சிப்பாய்கள் சடலம் ஒப்படைப்பு

கிளிநொச்சி, ஜூன்20

மணலாறு காட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது தாக்குதல் நடத்தவந்த படையினர் மீதான பதில் தாக்குதலில் கொல்லப்பட்ட இரு படையினரின் உடல்கள் நேற்று மாலை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிச்சைக்கார வேடத்தில் திரிந்த கருணா குழு உளவாளி கொலை!

### மட்டு. நகரில் 'பிஸ்ரல் குழு' கைவரிசை


மட்டக்களப்பு, ஜூன் 20

பிச்சைக்காரராக வேடமிட்டு மட்டக்களப்பு நகரில் நீண்டநாள் திரிந்து வந்த கருணா குழுவின் உறுப்பினரான உளவாளி ஒருவர் நேற்றுக்காலை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு 'லொய்ட்' வீதியில் சென்று கொண்டிருந்த இவர் மோட்டார் சைக்கிளில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் இராணுவப் பேச்சாளராக இளந்திரையன் நேற்று நியமனம்



கிளிநொச்சி, ஜூன்20

விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளராக இளந்திரையன் (மார்ஷல்) நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த இவர் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்திற்கு அண்மையில் மாற்றப்பட்டிருந்தார்.

ஜெனீவா சென்ற விடுதலைப் புலிகளின் உயர்மட்டப் பேச்சுக் குழுவிலும் இவர் இடம்பெற்றிருந்தார்.

விடுதலைப் புலிகளின் தலைமையால் [illegible]

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்வன்மைப் போட்டி நாளையே ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்20

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் நாளை புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகித் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன என்று யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுக் குழுச் செயலாளர் க.குமாரசாமி தெரிவித்துள்ளார்.

மூன்றுநாள் நிகழ்வுகளும் தினமும் காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை நடைபெறும்.

போட்டியாளர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட நிகழ்ச்சி ஒழுங்கின்படி போட்டிகள் யாவும் இடம்பெறுமெனவும் -

போட்டியாளர்கள் அனைவரும் உரிய நேரத்திற்கு மைதானத்திற்கு வருகைதர வேண்டும் என்றும் -

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுக் குழுச் செயலாளர் கேட்டுள்ளார்.

## விவசாய பீடத்துக்கான விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்20

யாழ். பல்கலைக்கழக விவசாயபீடத்தின் 16ம் அணி மாணவர்களுக்கான விசேட அவசர கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு விவசாயபீட பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு விவசாயபீட மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

## இந்து குருமாருக்கு அடையாள அட்டை

யாழ்ப்பாணம்,ஜூன்20

சர்வதே இந்துமத குருமார் ஒன்றியத்தின் வேண்டுகோளுக்கேற்ப இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்துமத குருமார்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

தமது அமைப்பின் ஊடாக விண்ணப்பித்த 50 விண்ணப்பதாரர்களுக்கு முதற்கட்டமாக விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன. விண்ணப்பதாரர்கள் தமது அமைப்பின் பொதுச்செயலாளருடன் தொடர்புகொண்டு தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்தி விசேட அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம் என இந்துமத குருமார் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதுவரை விண்ணப்பிக்கத் தவறிய குருமார்களும் அன்றையதினமே பதிவினை 'வேதாந்தமடம் இல. 18, குமாரசாமி லேன்' என்ற முகவரியில் உள்ள ஒன்றிய அலுவலகத்தில் மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## காணாமற்போனோர் குறித்து நேற்றும் நான்கு முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்20

காணாமற்போனார்கள் என்று கருதப்படும் நான்குபேர் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் இராச வீதியைச் சேர்ந்தவரான கந்தசாமி வசந்தகுமார் (வயது 27) என்பவர் கடந்த வியாழக்கிழமை வீட்டிலிருந்து தான் பணியாற்றும் வாகனங்கள் திருத்துமிடத்துக்குச் சென்றார் என்றும் -

அதன் பின்னர் அவர் வீடு திரும்பவில்லை என்றும் -

அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளார். கோப்பாயைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான கந்தையா ஜெயக்குமார் (வயது 25) என்பவரும் அதேதினம் காணாமற்போயுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏழாலை கிழக்கைச் சேர்ந்தவரான தியாகராசா ரமேஷ் (வயது 22) என்பவர் வீட்டிலிருந்து மல்லாகத்துக்கு வேலையின் நிமித்தம் கடந்த வியாழக்கிழமை சென்றார் என்றும் -

அதன் பின் அவர் வீடு திரும்பவில்லையென்றும் - அவரது தந்தையார் முறையிட்டுள்ளார்.

அத்தியடி, புது வீதியைச் சேர்ந்தவரும் வியாபாரியுமான கார்த்திகேசு கனகலிங்கம் (வயது 38) என்பவர் கடந்த 5ஆம் திகதி வவுனியா சென்றார் என்றும் -

அதன்பின்னர் அவர் குறித்த தகவலேதும் கிடைக்கவில்லையென்றும் -

அவரது தாயார் முறையிட்டுள்ளார்.

இந்த முறைப்பாடுகள் குறித்து மேல் நடவடிக்கைகளை தாங்கள் மேற்கொள்கின்றனர் என்று மனித உரிமைக்குழு அதிகாரி தெரிவித்தார். (ரி)

## உபகரணம் வழங்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,ஜூன்20

தென்மராட்சி, வடமராட்சிப் பிரதேச இந்து அறநெறிப் பாடசாலைகளுக்கான உபகரணங்கள் வழங்கல் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறவிருக்கின்றது.

இந்தப் பிரதேசத்தில் இயங்கும் அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்களைச் சமூகமளிக்குமாறு தென்மராட்சிப் பிரதேச இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் செல்வி சீ.மகிந்தினி கேட்டுள்ளார்.

## ஆங்கில வகுப்புகள் வியாழன் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்20

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் ஆங்கில ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்டுவரும் ஆங்கில வகுப்புகள் வழமைபோல் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும் என்று தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

# வீடியோக் கடை உரிமையாளர் கொலை; அறிக்கைதர படை அதிகாரிக்கு பணிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்20

அரியாலையில் வீடியோக் கடை உரிமையாளர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விவரமான அறிக்கை ஒன்றை நீதிமன்றில் சமர்ப்பிக்கும்படி 512ஆவது படை அதிகாரிகளுக்கு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வீடியோக்கடை உரிமையாளரான வோல்டர் மயூரன் என்பவர் படுகொலை தொடர்பாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை யாழ். நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

இக்கொலை தொடர்பான விசாரணைகளுக்காக நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு 512 பிரிக்கேட் படை அதிகாரிக்கு கடந்த தவணையில் உத்தரவிடப்பட்டிருந்தது.

நீதிமன்றில் ஆஜராகுவதற்குப் போதிய பாதுகாப்பு இல்லை என்று கூறி பிரிகேட் பொறுப்பதிகாரிக்குப் பதிலாக கப்டன் ஒருவர் நேற்று நீதிமன்றில் ஆஜரானார்.

இந்தச் சம்பவம் இராணுவ முகாமுக்குச் சமீபமாக இடம்பெற்றுள்ளது என்றும் -

சம்பவநேரம் சில படையினர் அந்தப் பகுதியில் பிரசன்னமாகியிருந்தனர் என்றும்- சாட்சியங்கள் நீதிமன்றுக்கு கிடைத்துள்ளன எனத் தெரிவித்த நீதிவான் சம்பவம் தொடர்பாகப் பூரண அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும்படி 512ஆவது பிரிக்கேட் அதிகாரிக்கு உத்தரவிட்டார். (ம)

### மன்னாரில் படையினரின் தாக்குதலில்

# காயமுற்றோரைப் பராமரித்து வந்த புனர்வாழ்வுக் கழக உறுப்பினர் கைது

மன்னார், ஜூன் 20

இராணுவத்தினரின் தாக்குதல்களால் காயமடைந்து மன்னார் தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் மக்களுக்கு உதவும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உறுப்பினரொருவரை மன்னார் பொலீஸார் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கைது செய்துள்ளனர்.

மன்னார் ஆலங்குளத்தைச் சேர்ந்த எஸ். அந்தோனி என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார். பேசாலை வெற்றிநாயகி மாதா ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்த அகதிகள் மீது இராணுவத்தினரும், கடற் படையினரும் நடத்திய தாக்குதல்களில் ஒருவர் கொல்லப்பட்டு நாற்பதுக்கும் மேற்பட்ட மக்கள் படுகாயமடைந்திருந்தனர்.

காயமடைந்தவர்கள் தற்போது மன்னார் தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உணவு, உடைகள் மற்றும் இதர நிவாரணப் பொருள்களை வழங்கி வருகின்றது.

இந்தப் பணிகளில் ஈடுபட்டிருந்த தொண்டர்களில் ஒருவரே பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் கைதுசெய்யப்பட்டமைக்கான காரணம் என்னவென்பது தெரியவரவில்லை. மன்னார் பொலீஸார் இவர் குறித்தான விசாரணைகளை நடத்தி வருகின்றனர் என்று கூறப்பட்டது. (க)

## 3 கடற்படையினரின் சடலங்களும் மீட்பு

கொழும்பு, ஜூன் 20

கொழும்பு முகத்துவாரக் கடலில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களைத் தேடிச் சென்றபோது படகு கவிழ்ந்து காணாமற்போன கடற்படைச் சிப்பாய்கள் மூவரின் சடலங்களும் மீட்கப்பட்டு விட்டன எனக் கடற்படையினர் நேற்றுத் தெரிவித்திருக்கின்றனர்.

கடந்த சனிக்கிழமை, விடுதலைப் புலிகளின் மூன்று உறுப்பினர்கள் நீர்கொழும்பிற்கும், வத்தளைப் பகுதிக்குமிடையிலான கடற்பரப்பில் வந்து பமுனுகம என்ற இடத்தில் இறங்கினர் எனக் கூறப்படும் சம்பவத்தையடுத்து ஏனைய புலி உறுப்பினர்கள்ளத் தேடும் பணிகளில் இராணுவத்தினரும், கடற்படையினரும் கூட்டாக ஈடுபடுத்தப்பட்டனர்.

இதன்போது, முகத்துவாரம் பகுதியிலிருந்த கடற்படைக் காவலரணிலிருந்து சென்ற படகொன்று கடற்படைச் சிப்பாய்கள் ஆறு பேருடன் கடலில் மூழ்கியது. இதில் மூன்று சிப்பாய்கள் மீனவர்களால் காப்பாற்றப்பட்டனர். இதர மூவரை உடனடியாகக் காப்பாற்ற முடியாமற் போயிற்று.

இந்த மூவரை கடற்படைச் சுழியோடிகள் தேடிய போதும் அவர்களின் சடலங்கள் நேற்றைய தினமே மீட்கப்பட்டன. இவர்களின் சடலங்களை இவர்களது குடும்பத்தவர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# தீவக அறநெறிப் பாடசாலைகளுக்கு சுருதிப்பெட்டி, மாணவர் சீருடைகள்

### இன்றும், நாளையும் விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்20

தீவுப்பகுதியைச் சேர்ந்த இந்து அறநெறிப் பாடசாலைகளுக்குச் சீருடை, சுருதிப்பெட்டி என்பன வழங்கப்படவுள்ளன.

சம்பந்தப்பட்ட இந்து அறநெறிப் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்கள் இன்றும் நாளையும் நல்லூர் முருகன் ஆலயத்துக்கு அருகில் உள்ள நாவலர் மணிமண்டபத்துக்குச் சமூகமளித்து தத்தமது பாடசாலைகளுக்குரிய சுருதிப்பெட்டி, மாணவர் சீருடை என்பவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று தீவுப்பகுதிக்கான இந்து அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் தெரிவித்தார்.

சுருதிப்பெட்டி பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட இந்து அறநெறிப் பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

நெடுந்தீவு கரமத்தை கந்தன் இந்து அறநெறிப் பாடசாலை, காரைநகர் புகலி சிவசுப்பிரமணிய இந்து அறநெறிப் பாடசாலை, நயினாதீவு நாகபூஷணி இந்து அறநெறிப் பாடசாலை, வேலணை முடிப்பிள்ளையார் இந்து அறநெறிப் பாடசாலை, காரைநகர் கிழவன்காடு இந்து அறநெறிப் பாடசாலை, காரைநகர் நாகபூசணி இந்து அறநெறிப் பாடசாலை, வேலணை வங்களாவடி முருகன் இந்து அறநெறிப் பாடசாலை.

மரணவர் சீருடைபெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு கதிரேசன் இந்து அறநெறிப்பாடசாலை, காரைநகர் கிழவன்காடு இந்து அறநெறிப் பாடசாலை, புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு இந்து அறநெறிப் பாடசாலை.

## குடித்தொகை கற்கைநெறி முடிவுகள் வெளிவந்தன

யாழ்ப்பாணம்,ஜூன்20

யாழ். பல்கலைக்கழக புவியியற்பீட பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவுக்கான குடித்தொகை அபிவிருத்திக் கற்கைநெறி 2004/2005 மீள் பரீட்சை முடிவுகள் நேற்று யாழ். பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிக்கான மீள் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் விவரம் வருமாறு:-

எஸ்.அருள்ராஜகுமார், ரி.பகீரதன், ரி.ஞானகரன், ஈ.வீ.பிரபாகரன், ஆர்.ஸ்கந்தராஜா, வி.தபேந்திரன், எஸ்.வேதநாயகம், கே.துரைராஜரட்ணம், கே.உமாகாந்தன், எஸ். வீரசுதாகரன்.

# கச்சதீவுக் கடலில் இந்திய மீனவரின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்!

### அந்நாட்டு அரசிடம் கம்யூ. கட்சி கோரிக்கை

பெங்களூர், ஜூன் 20

''இலங்கை அரச படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல்கள் மீண்டும் தலைதூக்கியுள்ளதால், கச்சதீவுக் கடல் பரப்பில் மீன்பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கு இந்திய மத்திய அரசு துரித நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.''

- இவ்வாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியிருக்கிறது.

''இரு தரப்பினருக்கும் இடையே மோதல்கள் மீண்டும் மூண்டுள்ளதால், கச்சதீவுக் கடல் பரப்பில் மீன்பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்கள் இரு தரப்பினரினதும் மோதல்களுக்கு இடையில் அகப்பட்டு சிக்கித் தவிக்கும் சாத்தியங்கள் அதிகமாகும். உயிராபத்துக்களுக்கும் ஆளாக நேரிட்டு விடுகிறது. எனவே, மத்திய அரசு இந்தக் கடல் பரப்பில் இந்திய மீனவர்களின் பாதுகாப்பை நிச்சயப்படுத்து[illegible]யாராலும் எதுவித தொந்தரவுகளுக்கும் ஆளாகாத வகையில் பார்த்துக் கொள்ளவும் வேண்டும்'' - என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி. ராஜா நேற்று இங்கு நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டார்.

தினமும் நூற்றுக்கணக்கான இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு வரும் இலங்கை அகதிகளுக்குப் புனர்வாழ்வளிப்பதற்குத் தமிழக மாநில அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இந்திய மத்திய அரசு கை கொடுத்து உதவ வேண்டும் என்றும் டி. ராஜா கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் 2002 இல் கைச்சாத்திட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையைக் கைவிடாது கடைப்பிடித்துக் கொண்டு பேச்சு மூலம் பிச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண முன்வர வேண்டும் என்றும் அவர் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார். (க)

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T:021 222 6242
0212223984
Fax: 021 222 5600
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979
New way of Flying



யாழ் - கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9933, 222 9944, 222 3837

# தென்னிந்திய நிலைமையும் தென்னிலங்கைப் போக்கும்

ஈழத்தில் குண்டுமழை பொழிந்து தமிழர்களை அழிக்கும் கொடுமை நடந்துகொண்டிருப்பது குறித்தும், அவர்களைக் காப்பாற்ற இந்திய மத்திய மற்றும் தமிழக மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் விளக்கி திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றார்.

தமிழகத்தின் தேசிய முற்போக்குத் திராவிடக் கழகத் தலைவரும், தமிழக சட்ட மன்ற உறுப்பினருமான நடிகர் விஜயகாந்த்தும் ஈழத் தமிழர்களுக்காக மீண்டும் குரல் எழுப்பத் தொடங்கியிருக்கின்றார்.

ஈழத் தமிழர்களுக்காக தமிழகத்திலிருந்து மீண்டும் வலுவான குரல் எழும்பத் தொடங்கியிருப்பது ஈழத் தமிழர்களுக்கு ஒரு தார்மீகப் பலமாகவும், பாதுகாப்பாகவும் உருவெடுத்து வருகின்றது.

ஈழத் தமிழர்களுக்காக தமிழகத்திலிருந்து எழுப்பப்படும் குரல்கள், வழமையாக இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்டுகின்றன. வீரமணியின் அறிக்கை கூட அந்த இரண்டு விடயங்களைத்தான் வலியுறுத்துகின்றது.

*"நாட்டால் வேறுபட்டாலும் பண்பாட்டால் ஒன்றுபட்ட தமிழின உணர்வாளர்கள் ஈழத் தமிழர்கள் பந்தாடப்படுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கலாமா? உடனடியாக மத்திய அரசு இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு சுமுகத் தீர்வு ஒன்றைக் காணத் தனது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்.*

*"இலங்கை இராணுவத்திற்கு இந்திய மத்திய அரசு எந்த உதவிகளை, எந்த ரூபத்தில் செய்தாலும் அது எரியும் நெருப்பை அணைப்பதற்குப் பதிலாக பெற்றோலை ஊற்றுவதற்குச் சமமாகி விடும்."*

- என்று வீரமணி தமது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார்.

அதாவது -

ஈழத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழர்களுக்கு இந்திய மத்திய மற்றும் தமிழக அரசுகள் உதவ வேண்டும். அத்தோடு இலங்கை அரசுக்கு இந்திய மத்திய அரசு எந்த உதவிளையும் வழங்கக் கூடாது.

- இந்த இரட்டை விடயங்களே தமிழகத்திலிருந்து வலுவான குரலில் இப்போது முன்மொழியப்படுகின்றன.

அத்தோடு, ஈழத் தமிழர் தாயகம் மீது தென்னிலங்கைச் சிங்கள அரசு கண்மூடித்தனமாக விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்துவதும், தமிழகத்தில் பெரும் சீற்றத்தை உருவாக்கியிருப்பதை உணர முடிகின்றது.

*"என்னதான் தீவிரவாதப் பிரச்சினை இருந்தாலும் சொந்த நாட்டுக் குடிமக்களின் குடியிருப்புகள் மீது அந்த நாட்டு இராணுவம் - அது ஏதோ வெளிநாடு போலக் கருதி - வான்வழித் தாக்குதல்களை, குண்டுவீச்சுக்களை நடத்துவது எந்த வகையில் நியாயம்?*

*"ஜம்மு - காஷ்மீர் பகுதிகளில் அதி தீவிரவாதிகளின் கண்ணி வெடி மற்றும் வன்முறைகளுக்காக இந்திய அரசு தனது இராணுவத்தை ஏவி விமானக் குண்டு வீச்சா நடத்துகின்றது? உலகில் எந்த ஒரு நாட்டிலும் நிகழாத இக்கொடுமை - கொடூரம் - ஈழத்தில் இடம் பெறுவது மனித நேயம் உள்ளவர்களைத் துடித்தெழ வைக்க வில்லையா?"*

-என்று கேள்வி எழுப்புகின்றார் வீரமணி. நடிகர் விஜயகாந்த் போன்றோரும் இதே கேள்வியைக் கேட்டிருக்கின்றனர்.

தமிழர் தாயகம் மீதான இலங்கை அரசுப் படைகளின் விமானக் குண்டு வீச்சுக் கொடூரம் தமிழகத்திலும், இந்தியாவிலும் மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியிலும் சீற்றமான உணர்வலைகளை எழுப்பத் தவறவில்லை.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கை, தனது நாட்டுக் குடிமக்களைத் தானே குண்டு வீசி அழிக்கும் வன்செயல் என சர்வதேச மன்னிப்புச் சபையே கிளர்ந்தெழுந்து கண்டித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

மேற்படி விமானக் குண்டு வீச்சு நடவடிக்கைகள், அரச கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பிரதேசத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் வகை, தொகையின்றி - நீதி, நியாயமின்றி - அரச துருப்புகளாலும், ஒட்டுப்படைகளாலும் படுகொலை செய்யப்படுவது, தமிழர்கள் தாக்கி, அடக்கி, ஒடுக்கப்படுகின்றமை போன்ற அரச தரப்பின் தமிழின விரோத அடாவடித் தனங்கள், இலங்கை விவகாரத்தில் தற்போது அமைதி பேணும் தமிழகத்தை மீண்டும் எரிமலையாக்கி விடக் கூடும் என்ற நிலைமையை உருவாக்கி வருகின்றன.

இந்த விவகாரத்தில் நீறுபூத்த நெருப்பாக அடங்கிக் கிடக்கும் தமிழகத்தை ஊதி, உசுப்பேற்றும் வேலையை - கைங்கரியத்தை - தென்னிலங்கை அரசுத் தரப்பு வழி நடத்துகின்றது.

தமிழின வன்முறைக்கு எதிரான இன உணர்வுத் தீ மீண்டும் தமிழகத்தில் சுலபமாகப் பற்றி, விளாசி எரியக் கூடிய சாதகமான அரசியல் சூழ்நிலை தமிழகத்தில் கருக்கட்டியுள்ள நிலைமையில், அது குறித்துப் புரிந்து கொள்ளாது தனது கைவரிசையைக் காட்ட முயல்கிறது தென்னிலங்கைச் சிங்களம்.

தென்னிந்தியாவில் - தமிழகத்தில் - மாறிவரும் கள யதார்த்தங்களைப் புரியாமல் தென்னிலங்கை காய் நகர்த்த முயல்வது - நடவடிக்கைகளை எடுப்பது - அதற்குப் பெரும் பின்னடைவான சிக்கல்களை உருவாக்கும் என எதிர்பார்க்கலாம்.

# ஒஸ்லோவில் புலிகள் நடந்துகொண்டவிதம் இராஜதந்திர முதிர்ச்சியின் வெளிப்பாடு!

## தமிழக சஞ்சிகை கருத்து

சென்னை, ஜூன்20

போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுகளுக்காக நோர்வே சென்ற விடுதலைப் புலிகள் அங்கு நடந்துகொண்ட விதம், இராஜதந்திரத்துறையிலும் புலிகள் முதிர்ச்சி பெற்றவர்கள் என்பதையே மிகத் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றது.

- இவ்வாறு தமிழகத்திலிருந்து வெளிவரும் 'தென்செய்தி' சஞ்சிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது. 'புலிகள் கொடுத்த பதிலடி' என்ற தலைப்பில் எழுதப்பட்ட அந்தப் பத்தியில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

நோர்வேயின் தலைநகரமான ஒஸ்லோவில் நடைபெறவிருந்த சமாதானப் பேச்சு முறிவடைந்துவிட்டது. கண்காணிப்புக் குழுவின் பாதுகாப்பு மற்றும் அதனது நடைமுறை தொடர்பாகப் பேசுவதற்காகத்தான் சிங்கள அரசும், விடுதலைப் புலிகளும் ஒஸ்லோ பேச்சுக்கு ஒத்துக்கொண்டனர். ஆனால், சிங்கள அரசு அதிகாரமுள்ள உயர்மட்டக் குழுவை இப்பேச்சுக்கு அனுப்பாததன் மூலம் அதன் முக்கியத்துவத்தைக் குறைத்துவிட்டது.

விடுதலைப் புலிகளின் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், காவல்துறைத் தலைவர் நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகிய உயர்மட்டத் தலைவர்கள் அனுப்பிவைக்கப்பட்டார்கள்.

சிங்கள அரசு அதிகாரமற்ற ஒரு குழுவை அனுப்பியதன் மூலம் பேச்சைக் குழப்பமுடிவு செய்ததை விடுதலைப் புலிகள் மிகக்கடுமையாக ஆட்சேபித்தனர். ஆனாலும், நோர்வேயின் வேண்டுகோளை மதித்து புலித்தேவனை பேச்சுக்கு அனுப்பிவைத்தனர். ஆனால், சிங்களத் தூதுக்குழு பேச்சைப் புறக்கணித்து வெளிநடப்புச் செய்துவிட்டது.

இந்த உண்மையை மறைத்துப் பேச்சு முறிவுக்குப் புலிகளே காரணம் என சிங்களத் தரப்பு பொய்ப்பிரசாரம் செய்துவருகிறது.

தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கின்ற அரச பயங்கரவாதத்தை முழுமையாக நிறுத்த வேண்டும் என்றும், புலிகளின் தளபதிகள் சந்தித்துப் பேசி முடிவுசெய்ய போக்குவரத்து சீர்செய்யப்படவேண்டும் என்றும் புலிகள் வற்புறுத்தியுள்ளனர். பின்னர் இந்த இருகோரிக்கைகளையும் நிறைவேற்றினால் ஜெனீவாப் பேச்சுக்குவரத் தயார் என்றும் புலிகள் கூறியுள்ளனர். ஆனால், சிங்கள அரசு இந்தக் குறைந்தபட்ச கோரிக்கையை ஏற்க மறுக்கிறது.

இதற்கிடையில் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளுக்குத் தடை விதித்ததன் மூலம் நிலைமையை மேலும் சிக்கலாக்கிவிட்டது.

கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் புலிகளுக்கு எதிராக ஒரு சார்பான நடவடிக்கைக்குப் பிறகு அதில் அங்கம் வகிப்பதற்கு அருகதையற்றவர்கள். நடுநிலையோடு இருக்கும் நாட்டின் பிரதிநிதிகளே கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகிக்கமுடியும் எனப் புலிகள் திட்டவட்டமாகக் கூறிவிட்டனர்.

சிங்கள அரசுக்குச் சார்பாக இருந்து புலிகளுக்குத் தடைவிதித்த ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகித்தால் அந்தக் குழுவின் செயற்பாடும் ஒரு சார்பாக அமையும். எனவே, அவர்களை நீக்கவேண்டுமென்று புலிகள் வெளியிட்டுள்ள கோரிக்கை நியாயமான கோரிக்கையாகும்.

ஒஸ்லோப் பேச்சுக்கு அதிகாரமற்ற குழுவை அனுப்பியதன்மூலம் புலிகளையும், சர்வதேச நாடுகளையும் ஏமாற்றுவதற்கு சிங்கள அரசு செய்த முயற்சியைப் புலிகள் வெற்றிகரமாக முறியடித்துள்ளனர். அதைப்போல் ஒரு பக்க சார்பாக நடந்துகொண்ட ஐரோப்பிய நாடுகளைக் கண்காணிப்புக் குழுவிலிருந்து விலக்கவேண்டும் என்று புலிகள் கூறிய துணிகரமான கோரிக்கையும் பாராட்டத்தக்கதாகும்.

இராஜதந்திரத் துறையிலும் புலிகள் முதிர்ச்சி பெற்றவர்கள் என்பதை மேற்கண்ட நடவடிக்கைகள் மிகத்துல்லியமாக எடுத்துக்காட்டியுள்ளன. துணிவாக நின்று பதிலடி கொடுத்த புலிகளை உலகத் தமிழர்கள் சார்பாக நாம் பாராட்டுகிறோம் - இவ்வாறு அந்த ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. (த)

# மகப்பேற்று நிலையங்கள் அனைத்தையும் சீராக இயக்க பணிப்பாளர் நடவடிக்கை

குருநகர், ஜூன்20

குடாநாட்டில் இயங்காத மகப்பேற்று நிலையங்களை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் உள்ள மகப்பேற்று நிலையங்கள் பலவும் சீராக இயங்கவில்லை எனக் கூறப்படுகிறது. இவை அனைத்தையும் இந்த வருடத்தில் பூரணமாக இயங்க வைப்பதற்கு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் துரித நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் 25 வைத்திய சாலைகளில் மகப்பேற்று விடுதிகள் உள்ளன. அவற்றில் பல மகப்பேற்று விடுதிகள் இயங்காமல் உள்ளன. மேலும் சில விடுதிகள் சீராக இயங்காத நிலையில் உள்ளன. இத்தகைய மகப்பேற்று நிலையங்களுக்கு நிரந்தரமாக மருத்துவ மாதுக்களை நியமித்து அவற்றைப் பூரணமாக இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (51)

# திருஉடல் திருஇரத்த தினத்தன்று குருநகரில் நற்கருணைப் பேரணி

குருநகர், ஜூன்20

கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் அனுஷ்டிக்கும் திருஉடல் திருஇரத்த தினமான கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். புனித மரியன்னை பேராலயம், குருநகர் புனித யாகப்பர் ஆலயம் ஆகியவற்றின் பங்கு மக்கள் இணைந்து குருநகரில் தேவ நற்கருணைப் பேரணியை நடத்தினார்கள்.

யாழ். மரியன்னை பேராலயத்தில் அன்று காலை நடைபெற்ற திருப்பலியைத் தொடர்ந்து கிறிஸ்துவின் உடல் என உருவாக்கப்படும் அப்பம் பேழைக்குள் வைக்கப்பட்டு நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டது. இப் பங்குகளைச் சேர்ந்த மக்கள் இந்த நற்கருணைக்கு ஆராதனைகள் செலுத்தினார்கள்.

யாழ். மரியன்னை பேராலயத்தில் இருந்து அன்று மாலை 4.30 மணியளவில் நற்கருணைப்பேழை அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வைத்து பாங்ஷால் வீதியூடாக குருநகர் புனித யாகப்பர் ஆலயம் நோக்கி பேரணியாக எடுத்துச் செல்லப்பட்டது.

இப்பேரணியில் கலந்துகொண்டவர்களில் பெரும்பாலானோர் தூய வெண்ணிற ஆடைகள் அணிந்து சென்றார்கள். வீதிகள் சிகப்பு வெள்ளை மற்றும் வெள்ளை நீல நிறக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. செபம் மற்றும் பஜனை வழிபாட்டுடன் இப்பேரணி நடைபெற்றது. நாட்டில் அமைதி நிலவ வேண்டிப் பாடல்கள் பாடப்பட்டன.

குருநகர் கார்மேல் அன்னை ஆலயத்தில் தரித்து நற்கருணை வழிபாடு நடைபெற்ற பின்னர் மீளவும் குருநகர் புனித யாகப்பர் ஆலயம் நோக்கிப் பேரணி நகர்ந்தது. இப்பேரணியில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் நற்கருணை நாதர் ஆசீர்வாதம் வழங்கப்பட்டதுடன் நற்கருணைப்பெருவிழா நிறைவடைந்தது. (51)

# இலங்கைக்கான உதவிகளை நிறுத்திவைக்க ஜப்பான் முடிவு?

இலங்கையில் வன்முறைகள் அதிகரித்து ஒரு முழு அளவிலான யுத்தம் தொடங்கும் நிலையிருப்பதால் தமது உதவிகளை நிறுத்த ஜப்பான் முடிவு செய்திருப்பதாகக் கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுதொடர்பில் உத்தியோகபூர்வமற்ற முறையில் ஸ்ரீலங்கா அரசுக்கு ஜப்பான் அறிவித்திருப்பதாகவும், ஜப்பான் தனது உதவிகளை நிறுத்தினால் ஐக்கிய நாடுகள் சபை உதவியும் நிறுத்தப்படக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

தமிழ் மக்களது சட்டபூர்வமான முறைமைகளை அரசு நிறைவேற்றவேண்டும் என்று டோக்கியோ இணைத் தலைமை நாடுகள் வலியுறுத்தியிருந்தன. ஆனால், அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவில்லை.

மேலும், துணை இராணுவக் குழுவினருக்கும், அரச படைகளுக்கும் தொடர்பில்லையென்று அரசு கூறுவதை நம்பவும் ஜப்பான் மறுத்துவிட்டது.

இந்த நிலையில் வன்முறைகளும் அதிகரித்து யுத்தம் தொடங்கக்கூடிய சூழலில் அபிவிருத்திக்கான உதவிகளை நிறுத்த ஜப்பான் பரிசீலிப்பதாக ஜப்பான் தூதரக வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலுள்ள இலங்கைக்கான சுவீடன் தூதுவரும் கடந்த வாரம் அமைதி முயற்சிகளை உண்மையான ஈடுபாட்டுடன் அரசு முன்னெடுக்காத வரை அனைத்து அபிவிருத்திப் பணிகளுக்கான உதவிகளும் இடைநிறுத்தப்படும் என்று பகிரங்கமாக எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## நாளை

ஆனி- 07
புதன்கிழமை
21.06.2006
திதி : ஏகாதசி
பின்னிரவு : 02.03
நட்சத்திரம் : அச்சுவினி
பிற்பகல் : 05.39
சுபநேரம் : 04.24-05.54
ராகுகாலம் : 11.54-01.24

# படுகொலைகளைக் கண்டித்து பதுளையில் சத்தியாக்கிரகம்

## 25ஆம் திகதி நடத்த ஏற்பாடு

அனைத்து மனிதப் படுகொலைகளையும் கண்டித்து எதிர்வரும் 25ஆம் திகதி பதுளையில் பெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

பதுளை சேனநாயக்கா அரங்கில் நடைபெறவுள்ள இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தைச் சுகாதாரத்துறை பிரதி அமைச்சர் வடிவேல் சுரேஷ் ஆரம்பித்துவைப்பார்.

இந்து, பௌத்த, இஸ்லாம் மதத் தலைவர்கள் இந்தப் போராட்டங்களுக்குத் தலைமை வகிப்பர்.

இந்தப் போராட்டத்துக்கான சகல ஏற்பாடுகளையும் ஹாலி - எல மக்கள் மன்றம் மேற்கொண்டுவருகிறது. (த)

## உதயவாக்கு

தற்புகழ்ச்சி எப்பொழுது முற்றுப் பெறுகின்றதோ அப்பொழுதே பெருந்தன்மை வெளிப்படத் தொடங்குகிறது.
- யங்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் தொலைபேசி இணைப்பு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0775956664 (51411)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

60 நாள்கள் நிரம்பிய பூச்சி நீக்கப்பட்ட நல்லின டொபர்மன் பின்சர் (**Doberman Pincher**) ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. (தாய் - கறுப்பு - 2'2'', தந்தை கறுப்பு - 2'5'') தொடர்பு: இல.19, இந்து மகளிர் ஒழுங்கை (குமாரசுவாமி வீதி சந்தி), கந்தர்மடம், யாழ்ப்பாணம். (51402)

### காணி விற்பனைக்கு

அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்திற்கு அண்மையில் கண்டி றோட்டுக்கு அருகில் கிணற்றுடன் கூடிய 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 3425 (51415)

### தொலைபேசி விற்பனைக்கு

**Suntel** தொலைபேசி ஒன்று உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 3425 (51416)

### வாடகைக்குண்டு

கே.கே.எஸ். வீதி, கொக்குவிலில் பெரிய வீடு ஒன்று வாடகைக்குவிடப்படும். தொடர்பு: 021 222 2537, 0777 110619 (51307)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பகிரா புறொயிலர் குஞ்சுகள் 14.06.2006 மாலை விநியோகிக்கப்படும். தொடர்பு: றாஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி, ரவி - சாவகச்சேரி, தாரகை - பருத்தித்துறை, றாஜீ ஸ்ரோர்ஸ் - பிரதான வீதி, நெல்லியடி, சுன்னாகம், உடுவில், கோப்பாய், கோண்டாவில், வட்டுக்கோட்டை, தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் ஆகிய கால்நடைச் சங்கங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். **T.P.:** 222 2867, 222 3529 (51099)

### தவறிவிட்டது

14.06.2006 அன்று ஓமந்தை - முகமாலைச் சோதனைச் சாவடிகளுக்கு இடையில் நீல நிற **Swiss Pr 10** சூட்கேஸ் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. இதில் மணப்பெண்ணின் கூறையும் அடங்கியுள்ளதால் கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். **T.P.:** 0776062406, 0770062269. செ.சின்னராசா, நாச்சிமார் கோயில் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய். (51344)

அன்னராசா ஜெயச்செல்வம் என்பவருடைய தே.அ.அட்டையும் ஜெயச்செல்வம் ராஸ்கலா என்பவருடைய தே.அ. அட்டையும் (இல. 735113780**V**) வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவில் பதியப்பட்ட முக்கிய ஆவணங்கள் அடங்கிய சிறிய கறுத்த நிற மணிப்பேர்ஸ் 15-06-2006 வல்லைச் சந்திக்கும் யாழ்ப்பாண போதனா வைத்திய சாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஜெ.ராஸ்கலா, தொண்டைமானாறு, பெரியகடற்கரை என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (சி/49749)

### தேவை

**6 அவுன்ஸ் கலிபொறேன்ஸ் சதுரப் போத்தல் தேவை.**
**கழுவிய போத்தல் ரூபா 9/- வும்**
**கழுவாத போத்தல் ரூபா 6/- வும்**
**சாராயக் கால் போத்தல் (கழுவியது) 5/- வுக்கும் கொள்வனவு செய்யப்படும்.**
**தொடர்பு: 257, ஆடியபாதம் றோட், நல்லூர்.** (51414)(32-19-17)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம்,ஜூன்20

. மாநகர சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு 3ஆவது கட்ட விலங்கு விசர் நாய் தடுப்பு ஊசி ஏற்றப்படவுள்ளது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுள்ளார்.

தடுப்பு ஊசி ஏற்றப்படும் திகதி, நேரம், இடம் பற்றிய விவரம் வருமாறு:-

எதிர்வரும் 30ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் 10 மணிவரை பாங்சால் வீதியில் உள்ள யாழ்.மாநகர் சபை இலவச சித்த மருந்தகம், முற்பகல் 10.30 மணிமுதல் 12 மணிவரை கிறீன்பீல்ட் சனசமூக நிலையம், பிற்பகல் 2.30 மணிமுதல் 4 மணிவரை கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையம். (204)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக மாணவன்
சு.சுதாகரன்
அவர்களின்
அன்புத் தந்தை
**அமரர்**
**சின்னையா சுப்பிரமணியம்**

அவர்களின் பிரிவால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ள...துடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பொறியியல் பீடம்,**
**மொறட்டுவப் பல்கலைக்கழகம்.**
**-இறுதியாண்டு மாணவர்கள்.**
(51419)(32-18-19-17)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 - 11 - 1982



மறைவு 11 - 07 - 2004

**பரமசிவம் ரஜீபன்** (சின்னம்பி)

*எம் அருமைத் தெய்வமே,*
*எம்மை விட்டு நீங்கள் சென்று ஈராண்டு ஆனாலும்*
*உம் நினைவால் வாழும் நாம் துடிக்கின்றோம்*
*தவிக்கின்றோம்*
*இப்பூமிதனில் உனைக் காண்பதற்கு வருவீரோ, வாறீரோ!*
*என் அருமைத் தெய்வமே!*

உங்கள் நினைவால் வாழும் நாம் உங்கள் ஆத்மா சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*துர்க்காபுரம், தெல்லிப்பளை.* (51423)(32-19-17) - **குடும்பத்தினர்.**

## தமிழீழ மாவட்ட நீதிமன்று, யாழ்ப்பாணம் (பளை)

வ.இல.: 01/2006
தன்மை: பணம்

### பகிரங்க அறிவித்தல்

மேற்படி இலக்க வழக்கின் எதிராளியும் அவருடைய பிணையாளியும் மன்றின் கட்டளைக்கு அமைய மன்றில் தோன்றாமையால் எதிராளி சார்பாக பிணை பொறுப்பிற்கு பொறுப்பாக்கப்பட்ட இல.156/21.06.2004 எனும் ஆவணத்தின் ஆதன அட்டவணையில் விவரிக்கப்படும் ஆதனப் பகுதிகளை விற்றல், வேண்டுதல் வேறு வகையில் உரிமை மாற்றம் செய்தல் அல்லது பராதீனப்படுத்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப் பகுதி, நாவற்குழி கோவிற்பற்று, கைதடி இறை ''சோழங்கன் மீ'' வளவும் மறு பிரிவுகளும் நி.பர 37 குழி 16 ½ இதில் கிழக்குப் பக்கமாக நி.பர 15 பதினைந்து குழி 7½ ஏழரை. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு.எஸ்.சிதரம்பரநாதர் அவர்களால் 1987ஆம் ஆண்டு ஆனி மாதம் 18ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 282ஆம் இலக்க நில அளவைப்படத்தில் இவ்வாதனம் 01உம், 02உம் துண்டுகளாகக் காட்டப்பட்டுள்ளது. இதில் குறித்த நில அளவைப் படத்தில் 01உம் துண்டுக்கு நி.பர 05 ஐந்து குழி 7.5 ஏழு தசம் ஐந்தும் கல்வீடும். இதற்கெல்லை கிழக்கு நாகலிங்கம் சிங்கராசா பெண் சாந்தினிக்குரிய ஆதனம், வடக்கு செல்லர் இராசையாவுக்கும் மறுபேருக்குரிய ஆதனம். மேற்கு கந்தையா செல்வராசாவின் ஆதனம். தெற்கு இவ்வாதனம் உரிமையாளர்களதும் இதன் கிழக்கெல்லையாதன உரிமையாளர்களதும் போக்குவரவுக்காகத் தற்போது விடப்பட்டுள்ள ஆறடி அகலமுள்ள ஒழுங்கைமுகப்பும். நாகலிங்கம் சிங்கராசா பெண் சாந்தினியின் ஆதனமும் இன்னும் இவ்வாதன கிழக்கெல்லையாதன உரிமையாளர் ஆதனத்தில் அமைந்துள்ள கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும். இன்னும் இவ்வாதன கிழக்கெல்லையாதன உரிமையாளர்கள் இவ்வாதனத்தின் தென்மேற்கு மூலையில் அமைந்துள்ள கிணற்றிற்கு போக்குவரவு செய்ய வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீங்கலாக இதனடங்கலும், இதைச் சேர்ந்தவைகளைத்தும்.

02) டி இறை மறவன்புலோ இறை ''கட்டத்துவயல்'' நெ.பர 108 குழி 8½ இதில் வடக்குப் புறமாக நெ.பர 48 நீக்கி மிகுதி நெ.பர 60 குழி 8½ இதில் மேற்குப் பக்கமாக நெ.பர 40 நாற்பது, இதில் தெற்குப் பக்கமாக நெ.பர 20 இருபதுக்கெல்லை கிழக்கு இதன் மீதியாதனம். சின்னப்பா அப்பாப்பிள்ளைக்கும் பெண் குஞ்சுப்பிள்ளைக்குமுரியது. வடக்கு தற்போது நாகலிங்கம் சிங்கராசா பெண் சாந்தினியின் ஆதனம். மேற்கு அப்பாத்துரை செகரத்தினத்துக்கும் மறுபேருக்குமுரியது. தெற்கு சின்னப்பா அறுமுகத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதைச் சேர்ந்த வயல் நிலமடங்கலும். சுப்பையா இராமதாசன் பெண் சாந்தகுமாரியாகிய நான் இச்சீதனக் கொடையை எனது கணவரின் பூரண அங்கீகாரத்துடன் ஏற்றுக்கொள்கிறேன்.

**மன்றின் கட்டளைப்படி**

**திகதி: 16/06/2006**

**வரைவு: வழ.சட்டவாளர்**
**தி.சிவகுமார்,**
**சட்டத்தரணி,**
**ஆழியவளை.** (5...)(32-...-17)

**பொ.சுப்பிரமணியம்,**
**பதிவாளர்**
**தமிழீழ மாவட்ட நீதிமன்று**
**பளை (யாழ்ப்பாணம்).**

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்20

மத்திய மாகாண அரசமுகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் 7ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளைமறுதினம் வியாழக்கிழமை நாவலர் கலாசாரமண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் இ.இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட அரசஅதிபர் கே.கணேஷ், யாழ்.மாநகரசபை ஆணையாளர் சி.வீ.கே.சிவஞானம், பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், சாவகச்சேரி பிரதேச செயலாளர் க.ஸ்ரீனிவாசன், வடமராட்சி சுருக்கெழுத்துக்கழக செயலாளர் கே.வி.சிவச்சந்திரதேவன், முன்னாள் தலைவர் ரி.கே.இராஜேந்திரராவ் ஆகியோர் கலந்துகொள்வர். (204)

## 2006ஆம் ஆண்டு மஹோற்சவம்

அளவெட்டி வடக்கு தவளக்கிரி
முத்துமாரி அம்பாள் ஆலய
வருடாந்த மஹோற்சவம் 22.06.2006
வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி
01.07.2006 தேர், 02.07.2006 தீர்த்த
உற்சவங்களுடன் பூர்த்தியாகும்.

(51418)(32-19-17) **பரிபாலன சபையினர்.**

## ஓராண்டு நினைவஞ்சலி

உதயம் 06 - 08 - 1950



மறைவு 30 - 06 - 2005

அமரர் **பொன்னுத்துரை பாலச்சந்திரன்**

உங்கள் அன்பினையும் பண்பினையும்
நாம் இனி எங்கு காண்போம்?
எங்களிடமிருந்து கண்ணீரை மட்டும்
காணிக்கையாக்கிக்கொண்டு விடை பெற்றீர்கள்
கண்ணீரால் விடைபெற்ற நீங்கள் - எங்கள்
உள்ளத்தால் இன்னும் நீங்கள்
விடை பெறவில்லை!
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்...

*10A, இராமலிங்கம் றோட்,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பேறாமகன்.

(51417)(32-19-17)

## நீங்காத நினைவில் 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 25 - 01 - 1925



உதிர்வு 19 - 05 - 2006

அமரர்
**கணபதிப்பிள்ளை மார்க்கண்டு யோசவ்**

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
வாழ்ந்திட்ட ஒளிச்சுடரே!
மாதம் ஒன்று சென்றதையா!
மாறவில்லை எம் துயரம்!
அவனிதனில் நாம் வாழ
வழிகாட்டி நின்றவரே!
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
ஐயா என்றழைக்க நீங்கள் இல்லையே!
பாசமழை பொழிந்து பாரில்
எம்மை வளர்த்தீர்கள்
பாசமுடன் நாங்கள் தேட
பறந்து எங்கு சென்றீர்கள்
வேதனைகள் நிறைந்த இந்த
விந்தையான உலகமதில்
கணவன் இல்லா மனைவியாகி
தந்தையில்லாப் பிள்ளைகளாகி
உறவெல்லாம் கலங்கி நிற்க
உலகை விட்டுச் சென்றீர்களோ!
மறைந்ததுதான் உங்கள் உடல்
மறையவில்லை உங்கள் நிழல்
பிரிந்ததுதான் உங்கள் உயிர்
பிரியவில்லை உங்கள் நினைவு
கலங்கும் விழிகளுடன்
இதயமது வெம்பிநிற்க
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம்
என்றும் உங்கள் ஆத்மசாந்திக்காய்...

25A, மூளாய் லேன்,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்.

(51347)(21-32-17-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பொதுநூலகத்தை சிரமமின்றி முகாமைத்துவம் செய்ய இழப்பீட்டின் மீதித் தொகையை விரைவில் வழங்க வேண்டும்

## ஜனாதிபதிக்கு மாநகர ஆணையாளர் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூன்20

இருபத்தைந்து வருடங்களுக்கு முன் எரியூட்டப்பட்ட யாழ்ப்பாணப் பொதுநூலகத்தை சிரமமின்றி முகாமைத்துவம் செய்ய வசதியாக 1982ஆம் ஆண்டில் இணங்கிக் கொண்டபடி இழப்பீட்டின் மீதித் தொகையை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாநகர சபை ஆணையாளர் சீ.வி.கே சிவஞானம் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொதுநூலக முகாமைத்துவம் தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஆணையாளர் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரித்துச் சாம்பராக்கப்பட்டு இருபத்தைந்து வருடங்கள் கடந்துள்ளன. இதனைத் தாங்களும் அறிவீர்கள்.தேசரீதியாகத் துக்கத்திற்கும் வெட்கத்திற்குமுரிய இந்நிகழ்வினுள் ஆழச் செல்ல நான் விரும்பவில்லை.

முதற்கண், பொதுநூலகம் 1981.06.01 ஆம் திகதியன்று தீ மூட்டப்பட்ட பொழுது நான் யாழ்.மாநகரசபையின் ஆணையாளராகக் கடமையாற்றினேன். சமய சந்தர்ப்பமாக இருபத்தைந்து வருடங்கள் கழிந்துள்ள இவ் வேளையிலும் அப்பதவியினை நானே வகிக்கின்றேன் என்பதனைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இத்துடன், அத்தருணம் இலங்கையின் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட லயனல் பெர்ணான்டோ தலைமையிலான "யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இடம்பெற்ற நிகழ்வுகளினால் ஏற்பட்ட நஷ்ட ஈடுகளைப் பரிசீலிக்கும் குழு" உடன் தொடர்புறும் பின்வரும் ஆவணங்களினது நிழற்பிரதிகளையும் தங்களுக்கு முன்னிலைப்படுத்துகிறேன்.

1981.11.30ஆம் திகதியன்று எம்மை இக்குழுவிற்கு முன்னர் தோன்றும் படி அழைப்பு விடுக்கும் தவிசாளர் லயனல் பெர்ணான்டோவிடமிருந்தான 1981.11.11ஆம் திகதிய கடிதம். பின்னர் இத்திகதி மாற்றப்பட்டு 1981.11.27 அன்று விசாரணை நடத்தப்பட்டது. நானே விசாரணைக்குழு முன் தோன்றி இழப்பீட்டிற்கான சபையின் நியாயப்பாடுகளை எடுத்துரைத்தேன்.

இரண்டாவது தவணைப் பணமாக ரூபா 1,100,000/- இனை விடுவிக்கும் ஜனாதிபதியின் செயலாளரது 1983.04.05ஆம் திகதிய கடிதம் மூலம் முதலாவது கட்டமாக 1982 மே மாதத்தில் ரூபா 900,000/- விடுவிக்கப்பட்டிருந்தது.

விசாரணைக்குழுவானது பொதுநூலகத்திற்கு விளைவிக்கப்பட்ட சேதங்களுக்கு எதிரான இழப்பீடாக ரூபா105,000,000/- (ரூபா 10.5 மில்லியன்) இற்கான விடுப்பினைப் பரிந்துரை செய்தது. இப்பரிந்துரைகளின் மீதிருந்து எழுவதாகவே மேலே குறிப்பிடப்பட்ட ரூபா 2,000,000/- கொண்ட தொகை ஜனாதிபதி நிதியுதவியிலிருந்து இச்சபைக்கு விடுக்கப்பட்டது.

எஞ்சிய தொகையானது நூலகத்தின் மீள் நிர்மாணத்தின் பின்னராக வழங்கப்படும் என எமக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் இற்றைவரை இம்மீதி இழப்பீடானது விடுவிக்கப்படவில்லை எனத் தங்களது அன்பான கவனத்திற்குக் கொண்டு வரவேண்டியுள்ளதையிட்டு மனம்மிக வருந்துகின்றேன். மேலே குறிப்பிடப்பட்ட தொகையிலிருந்தும் பொது மக்களது உதவு தொகைகளிலிருந்தும் நூலகம் புனரமைக்கப்பட்டு மேற்குப் பக்கக் கட்டடமும் பகுதியாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடங்கள் 1984.06.04அன்று திறந்து வைக்கப்பட்டு நூலகம் வழமைபோல் செயற்பட ஆரம்பித்தது. எனினும் 1985 மே 10ஆம் திகதிய நூலகத்தின் மீதான இரண்டாவது குண்டுவைப்புத் தாக்குதலினால் அது கைவிடப்பட்டது.

அத்திகதியிலிருந்த நூலகம் மூடப்பட்டிருந்தது. 1998ஆம் ஆண்டில் நூலகத்தினைப் புனரமைப்பதற்கான முயற்சிகள் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டது. இவ்வாறு புனரமைக்கப்பட்ட நூலகம் 2004பெப்ரவரி 23ஆம் திகதியிலிருந்து தொழிற்பட ஆரம்பித்தது. புனரமைப்புச் செயற்திட்டமானது வெளிவிவகார அலுவல்கள் அமைச்சின் அதிகாரத்திற்குட்பட்டதாக இருந்தது. (204)

## 30 வருடங்களாக புனரமைப்பின்றி சேதமடைந்துள்ள உடுப்பிட்டி வீதி

### திருத்தியுதவுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்20

உடுப்பிட்டி வடக்கு - நெற்கொழு வைரவர் ஆலயத்திற்குச் செல்லும் வீதி கடந்த 30 வருடங்களுக்கு மேலாக மீள் புனரமைப்பு இன்றி போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது.

இவ்வாறு உடுப்பிட்டி வடக்குப் பிரதேச முன்னேற்ற சங்கத் தலைவர் தே.பிரசாத் வல்வெட்டித்துறை நகரசபை செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வட மாகாணத்தில் பிரசித்திபெற்ற நெற்கொழு வைரவர் ஆலயத்திற்கு நாவலடி ஊடாகவும் - கொம்மந்தறை ஊடாகவும் இரு பிராதான வீதிகள் சென்றடைகின்றன. இவ்வீதிகள் இரண்டும் வல்வெட்டித்துறை நகரசபைக்கு உட்பட்ட மயிலியதனை 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவை.

இவை கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் வல்வை நகரசபையால் புனரமைப்புச் செய்யப்பட்டது. அதன் பின் மீள்புனரமைப்பு இன்றி தற்போது குண்டும் குழியுமாக போக்குவரத்து செய்யமுடியாது பெரும் கஷ்ரமாக உள்ளது.

அத்துடன், இவ் வீதிகளின் ஊடாக சுமார் 100 ஏக்கர் விவசாய நிலங்களுக்கும் செல்ல வேண்டியுள்ளது.

இதனால், விவசாயிகள் உழவு இயந்திரங்களையும் விவசாய உபகரணங்களையும் கொண்டு செல்வதில் பெரும் சிரமங்களை அடைகின்றனர்.

மேற்படி விடயம் தொடர்பாக வல்வை நகர சபைக்கு அறிவித்தும் இதுவரை எந்த அபிவிருத்தி நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

எதிர்வரும் ஆவணி மாதம் நெற்கொழு வைரவர் ஆலயப் பெருந்திருவிழா ஆரம்பமாக இருப்பதனால் -

பக்தர்களின் வசதிக்காக முன்னுரிமை பிரகாரம் மேற்படி இரு வீதிகளையும் புனரமைத்துத்தர வேண்டும் - இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதி யாழ்.அரச அதிபர் கே.கணேசுக்கும் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (185-204)



சர்வதேச 'கெயர்' நிறுவனத்தின் அனுசரணையுடன் பண்டத்தரிப்பு பனை தென்வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பனம் தொழில் வல்லுநருக்கான உதவிவழங்கும் நிகழ்வு அண்மையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. அதில்சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சர்வதேச 'கெயர்' நிறுவன குழுத்தலைவர் இ.பாலகிருஸ்ணன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் சங்கப் பொது முகாமையாளர் இ.குணரத்தினம் நிற்பதையும் முதலாவது படத்திலும் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். மாட்ட அரச அதிபர் கே.கணேஸ்'கெயர்' நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப் பட்ட சைக்கிள்களில் ஒன்றை பயனாளி ஒருவரிடம் கையளித்து அதற்கான ஒப்பந்தப்பத்திரத்தை வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

*(படங்கள்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)*

## வைத்தியசாலையில் கண்டெடுக்கப்பட்ட மேலும் சில அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம்,ஜூன்20

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்திற்குள் தவறவிடப்பட்ட அடையாள அட்டைகளில் மேலும் சில கண்டெடுக்கப்பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட் டுள்ளன.

கீழே பெயர் குறிப்பிடுபவர்கள் உரிய ஆதாரங்களைக் காட்டி யாழ்.போதனா வைத்தியசாலையின் அலுவலகத்தில் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அடையாள அட்டைக்குரியவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

ஆறுமுகம் துரைராசா (புதுமடம், உடுவில் தெற்கு), கண்ணம்மா மகேசன் (காட்டுப்புலம், கரவெட்டி கிழக்கு), சின்னப்பிள்ளை செல்வராசா (காட்டுப்புலம், கரவெட்டி கிழக்கு), ஜெயச்செல்வம் ராஷ்கலா (மாமுனை, செம்பியன்பற்று), அன்னராசா ஜெயச் செல்வம் (ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை), அன்னம்மா மயில்வாகனம் (சிறுப்பிட்டி, மேற்கு), மின்னல்கொடி கிருஷ்ணன் (காரைநகர் கிழக்கு), கதிரேசு சறோஜாதேவி (நெடுந்தீவு-5), செல்வராணி அப்புத்துரை (தாவடி தெற்கு, கொக்குவில்). (204)

## ஏழு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் 507 கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டன

### மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூன்20

யாழ். மாவட்டத்தில் உள்ள ஏழு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் 507 கட்டாக்காலி நாய்கள் கடந்த ஏப்ரல் முதலாம் திகதிவரை அழிக்கப்பட்டுள்ளன என்று மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2006ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை கட்டாலிக்காலி நாயினால் கடியுண்டவர்களில் 3 பேர் மரணித்துள்ளனர்.எனவே, வளர்ப்பு நாய் வைத்திருப்பவர்கள் நாய்வளர்ப்பு குடும்ப அட்டையைப் பெறு வதுடன்-

உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஊடாகத் தடுப்பூசி போடப்படும் போது தவறவிடாது வளர்ப்பு நாய்களுக்கு ஊசி போடப்படுவதை பொதுசுகாதாரப் பரிசோத[illegible] திப்படுத்திக்கொள்ளவேண்டும். இவ்வருடம் 70 சதவீதமான வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (185-204)

## வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்தோருக்கென தொண்டைமானாறில் அமைக்கப்படும் வீடுகள்

### வாழ்வதற்கு ஏற்றதல்ல என மக்கள் விசனம்

கரவெட்டி,ஜூன்20

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வாழ்வோருக்காக தொண்டைமானாறு காற்றாடிப் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் தற்காலிக வீடுகள் சுவாத்தியமற்றது - வசிப்பதற்கு ஏற்றதாக இல்லை - என்று அவ்வீடுகளில் குடியேறவுள்ள மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

திறந்த வெளியான காணிகளில் அமைக்கப்பட்டுவரும் இவ்வீடுகளின் கூரைகள் தகரசீற்றுகளால் வேயப்பட்டுள்ளன. இதனால் வெயில் காலங்களிலும் மழைக்காலங்களிலும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், இவ்வீட்டுத்திட்டத்திற்கு அருகில் தற்போது இராணுவத்தினரால் புதிய முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் குடியேறுவதற்கு அச்சமடைந்துள்ளனர்.

இவ்விடயங்கள் தொடர்பாக வடமராட்சியில் தற்காலிகமாக வசித்துவரும் வலி. வடக்கு மக்களின் கடற்றொழிலாளர் சங்கம் அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டு செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியில் தங்கியிருப்போர் தமது பிரதான தொழிலாகக் கடற்றொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் காற்றாடிப் பகுதியில் வசிக்கவிருக்கும் தொழிலாளர்கள் தொண்டைமானாறு பெரிய கடற்கரையில் தொழில்செய்வதற்கு வசதிசெய்து தரவேண்டும் என்ற [illegible] அரச அதிப[illegible]ம் முன்வைக்கவுள்ளதாக சங்கச் செயலாளர் தெரிவித்தார். (70)

## போதைப்பொருள் எதிர்ப்புதின நிகழ்வு

யாழ்ப்பாணம் ஜூன்20

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்புதின நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் சி.இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வில் கௌரவவிருந்தினர்களாக யாழ். போதனாவைத்தியசாலை இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி வைத்தியகலாநிதி டாக்டர் இ.சிவசங்கர்,உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன், இணுவில் மத்திய கல்லூரி அதிபர் சு.சதானந்தன் ஆகியோர் கலந்துகொள்வர். விசேட உரைகள், சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்புதினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில் வழங்கல் என்பனவும் இடம்பெறும். (204)

## கால்நடைகள் நீரின்றி அவதி

கரவெட்டி,ஜூன்20

வடமராட்சி பிரதேசத்தில் உள்ள மண்டான், கப்பூது, முள்ளி போன்ற புல்தரவைகளில் உள்ள குளங்கள் மற்றும் துரவுகள் தூர்ந்து போய் நீரின்றி காணப்படுகின்றன. இதனால் கால்நடைகள் நீரைப்பெற நீண்ட தூரம் அலைகின்றன.

இப்பிரதேசத்தில் உள்ள குளங்கள் மற்றும் துரவுகள், குப்பை கூழங்களால் நிரம்பி நீர்தேங்கமுடியாது தூர்ந்து போயுள்ளன. இங்கு மேய்ச்சலுக்காக வரும் கால்நடைகள் நீரைக் குடிக்க முடியாது பெரும் சிரமம் அடைகின்றன.

குளங்கள், துரவுகளை தூர்வை எடுத்து கால்நடைகள் நீர் அருந்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (70-204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் சுகாதார பிரிவுக்கு ஒன்பதுபேர் நியமனம்

வலி.தென்மேற்கு,ஜூன்20

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கிராமிய சுகாதார தொண்டர்களாக ஒன்பது பெண்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சுகாதார தொண்டர்களாக பணிபுரிந்து வருபவர்களிடையே எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியன நடத்தப்பட்டு இந்த ஒன்பது பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கான பயிற்சி யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளதாகவும் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (135)

## வன்னியில் வாகனப்பதிவுகளுக்கு நாளைமுதல் விசேட ஏற்பாடு

வட்டக்கச்சி, ஜூன்20

தமிழீழ மோட்டர் ஊர்திப் பதிவினை மேற்கொள்ளாது பயன்பாட்டில் உள்ள, பயன்பாட்டில் இல்லாத ஊர்திகளை பதிவு செய்வதற்கு வசதியாக விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவு பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இதன்படி பிரதேச ரீதியாக மோட்டார் ஊர்திப் பதிவுகளை இன்று முதல் ஜூலை 8 ஆம் திகதி வரை மேற்கொள்ள ஏற்பாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று புளியங்குளத்திலும் நாளை கனகராஜன் குளத்திலும் 22 ஆம் திகதி மாங்குளத்திலும் 23 ஆம் திகதி பாண்டியன் குளத்திலும் 26 ஆம் திகதி பெரிய பண்டிவிரிச்சானிலும் 27 ஆம் திகதி விடத்தல்தீவிலும் இலுப்பைக்கடவையிலும் 28ஆம் திகதி ஜெயபுரத்திலும் 29 ஆம் திகதி ஸ்கந்தபுரத்திலும் 30 ஆம் திகதி பூநகரியிலும் யூலை முதலாம் திகதி பளையிலும் 2 ஆம் திகதி மருதங்கேணியிலும் 3ஆம் திகதி விசுவமடுவிலும் 4ஆம் திகதி உடையார்கட்டிலும் 5ஆம் திகதி முல்லைத்தீவிலும் 6 ஆம் திகதி முள்ளியவளையிலும் 7 ஆம் திகதி முத்தையன் கட்டிலும் 8 ஆம் திகதி நெடுங்கேணியிலும் பதிவுகள் மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இப்பதிவுகள் குறித்த இடங்களில் உள்ள போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு பிரதேச செயலகங்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை மேற்கொள் ளப்படும்.

பதிவுகளை மேற்கொள்ள வரும்போது மோட்டார் ஊர்தியின் சிறிலங்கா ஆவணங்கள் அனைத்தினதும் நிழற்பிரதிகள் ஆயப்பகுதி தீர்வைச் சான்றின் நிழற்பிரதி பழைய கடவுச் சீட்டின் அளவிலான உரிமையளரின் கறுப்பு வெள்ளை புகைப்படம் இரண்டு உரிமையாளரின் குடும்ப அட்டையும் அதன் நிழற்பிரதிகளும் கொண்டு வருதல் வேண்டும். அத்துடன் பிணையாளி குடும்ப அட்டையுடன் நேரில் வருதல் வேண்டும். குடும்ப அட்டையின் நிழற்பிரதியும் கொண்டு வருதல் வேண்டும்.

இவ்விசேட ஏற்பாடுகளின்போது அந்தந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த பதிவு செய்யாத மோட்டார் ஊர்தியைப்பதிவு செய்து கொள்ளுமாறு தமிழீழ போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (405)

## முள்ளிக்குளத்தில் கிளைமோர் உதவிப்படை வீரர் சாவு!

யாழ்ப்பாணம்,ஜூன்20

மன்னார், முள்ளிக்குளம் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினர் சனிக்கிழமை நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் போர் உதவிப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

பரமன்கிராய், பூநகரியைச் சொந்த முகவரியாகக் கொண்ட ரவிச்சந்திரன் (தம்பையா சிவரட்ணம்) என்ற போர் உதவிப்படை வீரரே வீரச்சாவடைந்துள்ளார்.

---

குருவே துணை

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

இவ்வுலகில் 01 - 12 - 1939



இறைவனடியில் 24 - 06 - 2003

### சோமையா சுப்பிரமணியம்

(திதி: அபரபட்ஷ தசமி)

மானுலகம் நீத்திட்ட குலவிளக்கே!
வானுறைந்து மூன்றாண்டு முடிந்துளதோ!
தேனுறையும் பேச்சில்; தித்திக்கும் புன்சிரிப்பில்
தினந்தோறும் நினைவுகளில் நிழலாக நீங்கள்!

தேசம் கடந்தாலும் தேசமிசை வாழ்ந்தாலும்
பாசமிகு உறவுகளின் கனவுகளில் உங்கள்
நேசமுகம் தெரிகிறது

சற்குருவின் பாதத்தில் உள்அமைதி பெற்று
சற்சங்கம், சேவை, பயிற்சிபெற, உங்கள்
சித்தமுறு செய்கைகளால் சிறப்புற்றோம்!

அன்புத் தெய்வம், குரு நிழலில் சாந்திபெற
அவர் வழியில் பெருமை சேர்க்கும்.

59/7, அருள்பதி,
பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம். (51341)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 * 01 * 1920



மறைவு 30 * 06 * 2005

### திருமதி இரத்தினம் ஐயாத்துரை

திதி: 20.06.2006

அன்பின் பிறப்பிடமே- பண்பின்
திருவுருவே பாசத்தின் உறைவிடமே
உன் அன்பு முகம் கண்டு
ஆண்டொன்று சென்றதம்மா
உறவுகள் பல இருந்தாலும்- உன்
பிரிவால் நிர்க்கதியாய் நிற்கின்றோமம்மா
என் வாழ்வின் வழிகாட்டியாயிருந்த
எங்கள் உயிரே அம்மா!

உங்கள் ஆத்ம சாந்திக்காக கண்ணீருடன்
பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:

தாவடி வடக்கு,
தாவடி.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டி.

(51261) (39)

---

## ஓராண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 28.11.1983

மறைவு 01.07.2005



அழுத கண்ணீர் காய
முன்னே அம்மா
ஓராண்டு ஓடியதோ
உன் கோலத் திருமேனி
என்றும்
எம் அழியாச் சித்திரமே

போன வழி நீ
மறந்தாலும் நாம்
பார்த்த விழி இன்னும்
மூடவில்லை
தனி வழியே சென்றதால்
உன் நினைவு
எம் உயிருள்ளவரை
மாறாதம்மா

உன் ஆத்மசாந்திக்காய்
என்றும் இறைவனைப்
பிரார்த்திக்கும்.

- குடும்பத்தினர்.

பழவீடு,
இளவாலை.

(51340) (39)

### செல்வி சோபனா திருபாலசிங்கம்

---

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்

### இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம்

01.06.2006 இல் சிவபதமெய்திய அமரர் இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் நாளை (21.06.2006) புதன்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் நிகழவிருக்கின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.58, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
[illegible] இல. 021 222 6806.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
ஆர்.வி.ஜி.பீடி ஸ்தாபனத்தார்.

(39)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்பியாவின் நிலைமை இலங்கைக்கும் வருமா?

**ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றதன் பின்னர், சமாதான முயற்சிகளில் அதிரடி முடிவுகளை எடுத்தார். அவற்றின் பின் விளைவுகள் பாரதூரமானவையாக இருந்தன. படையினர் பலர் கிளைமோர் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர். எனினும், சின்னச் சின்ன விடயங்களில் எல்லாம் புலிகளைத் தோற்கடித்ததாக அரசு பறைசாற்றியது. இருப்பினும் அரசு புலிகள் விடயத்தில் எந்த விடயங்களை எல்லாம் மறுத்ததோ - நிராகரித்ததோ - அவையெல்லாம் தற்போது நடைபெறுகின்றன. இந்த நிலைமையும் சர்வதேசத்தின் தலையீடும் சேர்ந்து சேர்பியா - மொன்ரினீகுறோ நிலைமையை இலங்கையில் ஏற்படுத்தும் என்று கூறுகின்றார் கட்டுரையாளர் உபுல் யோசப் பெர்னான்டோ. 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரை இங்கு தமிழில் தரப்படுகிறது.**

கடந்தவாரம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வழமைக்குமாறாக இடம்பெற்ற நிகழ்ச்சியொன்று விமான நிலைய ஊழியர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தத் தவறவில்லை. விமான தரிப்பிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த விமானமொன்றின் அருகில் விமானப் படையினரின் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் வந்த சில வாகனங்கள் நிறுத்தப்பட்டன. அவற்றிலிருந்து இறங்கிய விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்கள் அருகில் நிறுத்தப்பட்டிருந்த விமானத்தினுள் உள்நுழைந்ததைக் கண்ட விமான நிலைய ஊழியர்கள் பலர் ஆச்சரியமடைந்தனர்.

இந்தச் சம்பவம், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பதவியிலிருந்த வேளையில் வெளிநாடுகளுக்கு செல்கையில் இடம்பெற்ற நிகழ்வுகளை ஞாபகப்படுத்தின. பாதுகாப்புக் காரணங்களுக்காக ராஜதந்திரப் பிரமுகர்களுக்கான உள்நுழையும் வாசல் வழியாக விமான நிலையத்துள் பிரவேசிக்கக் கூட அச்சமுற்றிருந்த சந்திரிகா தாம் பயணம் செய்யவிருக்கும் விமானம் நிறுத்தி வைக்கப்படும் இடம்வரை தமது வாகனத்தில் சென்று விமானத்தில் ஏறிக் கொள்வதை வழக்கப்படுத்திக் கொண்டிருந்ததை அன்றைய அந்தச் சம்பவம் விமான நிலைய ஊழியர்களுக்கு ஞாபகப்படுத்தத் தவறவில்லை.

உண்மையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவைத் தவிர வேறெந்தவொரு ஜனாதிபதியோ - ஏன் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோ கூட முன்னெப்போதும் இத்தகைய பாணியில் தமது வெளிநாட்டுப் பிரயாணங்களை மேற்கொண்டதில்லை. ஜனாதிபதிகள் மட்டுமல்லாது நாட்டின் பிரதமர் பதவியை வகித்தவர்களில் எவரும்கூட ஒருபோதும் இத்தகைய விதத்தில் விமானப் பயணம் மேற்கொண்டதில்லை. ஜனாதிபதி சந்திரிகா தற்போது தமது பதவியை இழந்துள்ள நிலையால் அவருக்கு அத்தகைய விசேட சலுகைகளை அனுபவிக்க இயலாது போயுள்ளது.

சந்திரிகா முன்னர் வெளிநாடுகளுக்குச் செல்ல நேர்ந்த வேளையில் விமானப் பயணத்தை மேற்கொண்ட வகையிலேயே அண்மையில் தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகள் அமைப்பின் தூதுக்குழு ஒஸ்லோவுக்குச் சென்றது. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தொடர்பான கூட்டத்தில் பங்குபற்றவே அக்குழு ஒஸ்லோவுக்குப் புறப்பட்டுச் சென்றது.

சந்திரிகா ஜனாதிபதியாகக் கடமையாற்றிய காலகட்டத்தில் அவருக்கு கிட்டியிருந்த வாய்ப்புகளை ஒத்ததான நடைமுறையைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் ஒஸ்லோவுக்கு விமானம் ஏறிய சமயத்தில் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவோ நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அவசர காலச் சட்டத்தை மேலும் நீடிப்பதற்கான விவாதத்தில் கலந்து பேசிக்கொண்டிருந்தார். அண்மைக்காலமாக பாதுகாப்புப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட மற்றும் படுகாயங்களுக்கு உள்ளாக நேர்ந்த படையினரது விவரங்களைத் தெரிவித்து உரையாற்றிக் கொண்டிருந்தார்.

உண்மையில் இவ்விதம் பெருந்தொகையான பாதுகாப்புப் படையினர் உயிரிழக்க நேர்ந்தமைக்கான காரணமென்ன? ஜெனீவா சமாதானப் பேச்சுகளுக்குச் செல்வதற்கு முன்னர் கிழக்கு மாகாண விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்கள் கிளிநொச்சிக்குச் சென்று தமது தலைவர் பிரபாகரனைச் சந்தித்து ஆலோசனை நடத்துவதற்கான போக்குவரத்து வசதியாக அரசு ஹெலி வசதி செய்து கொடுக்க மறுத்தமையே இதற்கான காரணமாகும். உண்மையில், ஜெனிவா முதலாவது சுற்றுப் பேச்சுகளுக்குப் பின்னரே பாதுகாப்புப் படையினருக்கெதிராகக் கிளைமோர் தாக்குதல் உட்பட பலவித தாக்குதல்கள் தீவிரமடைந்தன.

இவ்விதம் பாதுகாப்புப் படையினர் பலர் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் சிக்கி உயிரிழக்க நேர்ந்ததன் பின்னரும் புலிகள் ஒஸ்லோவுக்குச் செல்வதற்காக வன்னியிலிருந்து கட்டுநாயக்காவுக்கு ஹெலி பாதுகாப்புப் பயண வசதியை அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

அது மட்டும்தானா? மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் சமாதானப் பேச்சுகளை மேற்கொள்ள உகந்த இடமாக ஒஸ்லோவை விடுதலைப் புலிகள் பிரஸ்தாபித்த போது, அரசு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. அரசின் அந்த மறுப்பின் பிரதிபலிப்பாக நாட்டில் மீண்டும் கிளைமோர் குண்டுத் தாக்குதல்கள் பரவலாக மேற்கொள்ளப்பட்டன. அதன் காரணமாக அரச படையினர் பலர் உயிரிழக்கவும், பலர் படுகாயமுறவும் நேர்ந்தது. அப்படியிருந்தும் அரசு பேச்சுகள் ஒஸ்லோவில் இடம்பெற வேண்டுமென்ற புலிகளின் கோரிக்கையை உறுதியாக மறுத்துவந்தது. விடுதலைப் புலிகளது தாளத்துக்கு ஆட அரசு தயாராயில்லை என உறுதியாகத் தெரிவித்தது. விடுதலைப் புலிகள் முன் அரசு தலை தாழ்த்தப் போவதில்லை எனத் தெரிவித்து, சிக்கலுக்கு மாற்றுவழியாக ஒஸ்லோவில் பேச்சுகள் என்பதை விடுத்து ஜெனீவாவில் பேச்சுகளை மேற்கொள்வதற்கான யோசனையை அரசு முன்வைத்தது. கடைசியில் விடுதலைப் புலிகளும் அரசின் அந்த யோசனையை ஏற்க முன்வந்தனர்.

அந்தவேளையில் இந்நாட்டின் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் மட்டுமன்றி, அரச மற்றும் அரச சார்பற்ற ஊடகங்கள் யாவும் இந்த முடிவு அரசுக்குக் கிட்டிய பெருவெற்றியெனச் சித்தரிப்பதில் ஈடுபாடு காட்டிச் செயற்பட்டன. விடுதலைப் புலிகள் அமைப்பின் நிலைப்பாட்டுக்குத் தலைசாய்க்காது, விட்டுக் கொடுக்காது தமது நிலைப்பாட்டில் அரசு உறுதியை வெளிப்படுத்தியதாக இந்த ஊடகங்கள் அரசைப் பாராட்டித் தள்ளின.

ஒஸ்லோவில் பேச்சுகளை மேற்கொள்ள விரும்பிய விடுதலைப் புலிகளை ஜெனீவாக்கு அனுப்பி வைத்து அவர்களைத் தோல்வியுற வைத்து விட்டதாக அரசு அறிக்கைகளை வெளியிட்டு வந்தது. சமாதானப் பேச்சுகளை ஆரம்பித்தபோதே விடுதலைப் புலிகள் தோற்றுவிட்டதாக அரசு பறைசாற்றிக் கொண்டது.

அந்தவேளையிலிருந்து சில மாதங்கள் கழிந்துவிட்ட நிலையில், விடுதலைப் புலிகள் போர்நிறுத்த கண்காணிப்புக் குழு குறித்து பேசுவதற்காக நோர்வேக்குச் செல்ல முடிந்திருக்கிறது. அந்த வகையில் விடுதலைப் புலிகள் ஒஸ்லோவில் பேச்சுகள் இடம்பெற வேண்டுமென முன்னர் முன்வைத்த கோரிக்கையை அரசு ஏற்க மறுக்கப்போய் உருவான தாக்குல்கள் காரணமாக உயிரிழந்த பாதுகாப்புப் படையினரின் மரணங்களுக்கு யார் பொறுப்பேற்பது?

கிழக்கு மகாணத்திலுள்ள விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்கள் வன்னிக்குச் சென்று தமது தலைமைப் பீடத்துடன் கலந்தாலோசிக்க அவர்களுக்கான பயண ஒழுங்காக ஹெலி வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு மறுப்புத் தெரிவித்ததன் காரணமாக விடுதலைப் புலிகளது தாக்குதல்களுக்கு ஆளாகி உயிரிழந்த படையினரின் இழப்புக்கான பொறுப்பை யார் ஏற்பது?

இவற்றின் [illegible] விடயம் [illegible] தெளிவாகிறது. அரசின் முடிவுகளும் செயற்பாடுகளும் தெளிவற்றுக் குழப்பமான நிலையிலேயே காணப்படுகின்றன என்பதே அதுவாகும்.



ஐரோப்பிய ஒன்றியம் கூடி விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது தடைவிதித்தது மட்டுமன்றி, இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் கடும் அக்கறை காட்டிச் செயற்படும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் வைத்து, ரணிலின் அரசு பதவியிலிருந்த வேளையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒஸ்லோ உடன்படிக்கையை அல்லது சமஷ்டி ஆட்சி முறையொன்றை நடைமுறைப்படுத்த அரசு இணங்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளது. இதேபோன்ற வகையிலான அணுகுமுறையொன்றினையே சேர்பியா - மொன்ரினீகுறோ பிரச்சினையிலும் ஐரோப்பிய ஒன்றியம் கடைப்பிடித்தது.

சேர்பியாவிலிருந்து விலகி தமக்கென தனியான அரசொன்றை உருவாக்குவதற்காக மொன்ரினீகுறோ மக்கள் நீண்ட காலமாகவே முயன்று வந்தனர். ஆயினும், அத்தகைய கோரிக்கையை சேர்பியா தொடர்ந்தும் மறுதலித்து வந்தது.

இந்தப் பிரச்சினை ஐரோப்பிய ஒன்றியத்துக்குப் பெரும் தலைவலியாக அமைந்து வந்தது. கடைசியில் இந்தப் பிரச்சினையையைத் தீர்த்து வைக்கும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றியம் மத்தியஸ்தம் வகிக்க முன்வந்தது. பிரச்சினையைச் சம்பந்தப்பட்ட இரு நாடுகளும் சுமுகமான முறையில் தீர்த்துக் கொள்வதற்காக முதலில் ஐரோப்பிய ஒன்றியம் கால வரையறையொன்றை விதித்தது. அது மட்டுமன்றி பிரச்சினையைக் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் சுமுகமாகத் தீர்த்துக் கொள்வதற்கான ஆலோசனைகளையும் ஐரோப்பிய ஒன்றியம் சம்பந்தப்பட்ட இருநாடுகளுக்கும் வழங்கியது.

அது உண்மையில் தற்போது இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளுமாறு வழங்கிய ஆலோசனையை ஒத்ததொன்றே. விடுதலைப் புலிகள் அமைப்பு மீது தடை விதித்த அதேசமயம், சமஷ்டி ஆட்சிமுறையொன்றினை உருவாக்க ஒப்புக் கொள்ளுமாறு இலங்கை அரசுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் அறிவுறுத்தியுள்ளது.

சேர்பியா மற்றும் மொன்ரினீகுறோ என்பவற்றுக்கு வழங்கிய இத்தகைய ஆலோசனையில் மொன்ரினீகுறோவில் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை நடத்தி, பொதுமக்களில் 55 வீதத்துக்கு மேற்பட்டோர் தமக்குத் தனியான இராச்சியம் வழங்குமாறு அபிப்பிராயம் தெரிவித்தால் சேர்பியா அரசு அதனை ஏற்றுச் செயற்பட வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்திருந்தது. சேர்பிய அரசும் இந்த முடிவுக்கு ஒப்புதல் தெரிவித்தது. ஆயினும், மொன்ரினீகுறோ தமக்கு விதிக்கப்பட்ட 55 வீத ஆதரவு என்பது நியாயமற்றதொன்றென ஆட்சேபனை தெரிவித்தது. ஆனால், அதேநேரம் சேர்பிய அரசோ, மொன்ரினீகுறோவால் இந்த 55வீதம் என்ற இலக்கைத் தாண்ட இயலாதெனக் கருதி இறுமாந்திருந்தது.

கடைசியில் பொதுமக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பும் உரிய வகையில் நடத்தி முடிக்கப்பட்டது. சேர்பியாவிலிருந்து பிரிந்து [illegible] தனியான அரசாக உருவாக்கப்பட வேண்டுமென்பதற்கு ஆதரவாக 55.4 வீத வாக்குகள் கிட்டின. தற்போது மொன்ரினீகுறோவைத் தனியானதொரு அரசாக அங்கீகரிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் தெரிவிக்கின்றன. அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் மொன்ரினீகுறோவைத் தனியானதொரு அரசாக அங்கீகரிக்கத் தயாராயுள்ளன.

**தமிழில்: விபெஸ்ரி**

இன்று இலங்கை அரசுக்குக்கூட, ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் நாட்டைப் பிரிக்காமலேயே பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு வற்புறுத்தி வருகின்றன. அதற்காகவே இவ்விரு தரப்புகளும் இணைந்து சமிக்ஞையொன்றை வெளியிட்டு வருகின்றன. இலங்கை அரசு அதனை ஏற்றுக்கொள்ள விரும்பி, அதற்கு விடுதலைப் புலிகள் விரும்பாது விட்டால் அவர்கள் சிரமத்துக்குள்ளாக நேரிடும்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா ஆகிய இவ்விரு தரப்புகளும் முன்வைக்கும் இந்த யோசனையை ஏற்றுக்கொள்ள இலங்கை அரசு பின்வாங்குமானால் இவ்விரு தரப்புகளும் இலங்கை விடயத்தைக் கைகழுவி ஒதுங்கிக்கொள்ளும். அத்தகைய நிலையில் நாட்டில் யுத்தமொன்று மூள்வதைத் தடுக்க இயலாது போய்விடும். அந்த யுத்தத்தில் அரசினால் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க இயலுமானால், நாடு தப்பிப் பிழைக்கச் சந்தர்ப்பமுண்டு. அவ்வாறன்றேல் நிச்சயமாக ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் இந்த விடயத்தில் தலையிட்டு மத்தியஸ்தம் வகிக்க முன்வரும்.

ஆனால், அத்தகைய சந்தர்ப்பமொன்றில் ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் இணைந்து மற்றொரு யோசனையை முன்வைக்கக் கூடும். விடுதலைப் புலிகள் தமது பலநிலையை வெளிப்படுத்தும் பின்னணியில் ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் மதியஸ்தம் வகிக்க முன்வந்து வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பொதுமக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பொன்று நடத்துமாறு கோரினால், இலங்கை அரசினால் [illegible] நிலையில் அந்த யோசனையைப் புறம் [illegible] எதிர்ப்புத் தெரிவிக்க இயலாத நிலை உருவாகும் என்பதில் சந்தேகம் கிடையாது. ஆ[illegible]லால் இன்றைய சமாதான முயற்சிகளை மு[illegible]னெடுத்துச் செல்லும் வேளையில் அரசு [illegible]கிய விடயமொன்றை மறந்துவி[illegible] இலங்கையின் இனப்பிரச்சினை[illegible] சமாதான வழியிலோ, அல்லது யுத்தமொன்றின் மூலமோ தீர்வு கண்டு விட இயலாது எனச் சர்வதேச சமூகம் எண்ணத் தலைப்படும் ஒரு நிலை ஏற்பட இடமளிப்பது நஷ்டத்தை ஏற்படுத்துமொன்றாய் அமையும் என்பதை அரசு மனதில் கொள்ளல் வேண்டும்.

ஏனெனில், இன்றும் கூட மொன்ரின்குறோ போன்று நாட்டின் பொதுமக்கள் விருப்பம் தெரிவிப்பார்களாயின், தமிழர்களுக்கெனத் தனியான அரசொன்றை உருவாக்கும் யோசனைக்கு ஆதரவளிக்க சர்வதேச சமூகம் தயாராயுள்ளது. எனவே, அரசின் சமாதான நடவடிக்கைகளைக் கையாளுபவர்களுக்கு கூற வேண்டிய விடயமொன்றுண்டு. அதுசு[illegible], அவதானமாக! மிக அவதானமாக!! *

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரியில்

# சிறுவர் நாடக நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்

புதுக்குடியிருப்பு ஜூன்,20

புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரியின் சிறுவர் நாடகப்பயிற்சி பட்டறை நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பணிமனைக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

கடந்த 15 ஆம் திகதி புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரிப் பொறுப்பாளர் திருமதி க.சாம்பவி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில்பொதுச்சுடரினை மட்டக்களப்பு அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் அம்பி ஏற்றிவைக்கத் தமிழீழ தேசியக் கொடியை அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

இதனையடுத்து ஈகச்சுடரை தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சை ஏற்றிவைக்க மாவீரர்களின் படங்களுக்கு மூத்த நாடகக் கலைஞர் நல்லை சுந்தர் மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து சிறுவர் அரங்க நிகழ்வுகளும் அதனையடுத்து பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

சான்றிதழ்களை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் வழங்கினார். (353)

# வட்டக்கச்சியில் கட்டாக்காலி நாய்கள் பிரதேச சபையினால் அழிக்கப்பட்டன

வட்டக்கச்சி, ஜூன்20

தமிழீழ சுகாதார சேவையினரால் இம் மாதம் நீர்வெறுப்பு நோய்த் தடுப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதையடுத்து தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் கட்டாக்காலி நாய் அழிப்புச் செயற்பாடுகளும் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் வட்டக்கச்சியில் கடந்த 13 ஆம் திகதி கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

தமிழீழ சுகாதார சேவையினரின் ஏற்பாட்டில் கரைச்சிப் பிரதேச சபையினரால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வட்டக்கச்சி சந்தைப் பகுதி, குடியிருப்பு பகுதி, இராமநாதபுரம் பகுதி, ஆகிய இடங்களிலுள்ள கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்பட்டன.

கடந்த 12 ஆம் திகதி முதல் வட்டக்கச்சி, இராமநாதபுரம் உட்பட பாரதிபுரம், விவேகானந்தநகர், மலையாளபுரம், ஆனந்தநகர், ஜெயந்திநகர், திருநகர், கனகபுரம், கிளிநொச்சி சந்தைப்பகுதி, உருத்திரபும், கூழாவடி, இரத்தினபுரம், கனகாம்பிகைக்குளம், பன்னங்கண்டி, மருதநகர் ஆகிய இடங்களில் 650 இற்கும் மேற்பட்ட கட்டாக்காலிகள் பிடித்து அழிக்கப்பட்டன எனவும் -

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 450 இற்கும் மேற்பட்ட வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (450)

## மருத்துவ சேவை

வட்டக்கச்சி,ஜூன்20

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் நடமாடும் மருத்துவ சேவையும் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கும் அண்மையில் மன்னார் மூன்றாம்பிட்டியில் நடைபெற்றன.

இதில் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன வைத்தியர் கிருபா தனிநபர் சுகாதாரம், சுற்றுப்புறச் சூழல், நோய் பரவாது தடுப்பது எப்படி? போன்ற விழிப்புணர்வுக் கருத்துகளை வழங்கினார். (405)

## கலந்துரையாடல்

வட்டக்கச்சி,ஜூன் 20

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் மேம்பாட்டுப் பேரவையின் அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட மருத்துமனையின் புதிய கட்டட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மேம்பாட்டுப் பேரவை நிர்வாக அங்கத்தவர்களையும் கிளிநொச்சிநகர், கனகபுரம், ஆனந்தபுரம், இரத்தினபுரம், கிருஷ்ணபுரம், விவேகானந்தநகர், பொன்நகர், பாரதிபுரம், விநாயகபுரம், கனகாம்பிகைக்குளம், திருவையாறு, மருதநகர், உதயநகர் மேற்கு, உதயநகர் கிழக்கு, திருநகர் வடக்கு, திருநகர் தெற்கு, ஜெயந்திநகர், கணேசபுரம், செல்வாநகர், புதுமுறிப்பு, உருத்திரபுரம், பரந்தன் ஆகிய கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், செயலாளர்களைக் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி பொது வைத்தியசாலை மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் வைத்திய கலாநிதி இ.சதானந்தன் கேட்டுள்ளார். (405)

# தற்காலிக மருத்துவ அனுமதி பெற்றோருக்கு மீள்பரீட்சிப்பு தொடர்பான நேர்முகத் தேர்வு

இன்றும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது

வட்டக்கச்சி,ஜூன்20

தமிழீழ சுகாதார சேவையினரால் 1997ஆம் ஆண்டு தற்காலிக மருத்துவ அனுமதி வழங்கப்பட்டோரை மீள்பரீட்சிப்புச் செய்வதற்கான நேர்முகத்தேர்வு இன்றும் நாளை மறுதினமும் தமிழீழ சுகாதார சேவையினரின் நடுவப் பணியகத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழ சுகாதார சேவையினர் தாயகத்தில் சேவையாற்றும் மருத்துவர்களுக்கு விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளனர்.

அந்த அறிவித்தலிலேயே இவ்வாறு நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பரம்பரை ஆயுள்வேத மருத்துவர்களுக்கு ஆங்கில மருத்துவம் செய்வதற்கான அனுமதி இல்லை. ஆயுள்வேதக் கல்லூரி, பல்கலைக் கழகங்கள் போன்றவற்றில் பட்டம் பெற்றவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆங்கில மருத்துவ அனுமதி வழங்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஸ்ரீலங்கா மருத்துவ சபையின் அல்லது தமிழீழ மருத்துவ சபையின் பதிவு இல்லாதவர்கள் எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து மருத்துவம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (405)

## நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல்

வட்டக்கச்சி, ஜூன் 20

புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது. வழமை போல் இவ் விழாவில் வியாபாரம் மேற்கொள்வோருக்கு இன்று செவ்வாய்க்கிழமையில் இருந்து இடம் ஒதுக்கப்படும் எனவும்- உரியவர்கள் ஆலய பரிபாலன சபையினரிடம் பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளுமாறும் புதூர் நாகதம்பிரான் ஆலய பரிபாலனசபையினர் கேட்டுள்ளனர். (405)

# நுங்கு அதிகமாக வெட்டப்படுவதால் பனம்பொருள் உற்பத்தி பாதிப்பு

கிளிநொச்சி,ஜூன்20

நுங்குப் பயன்பாட்டுக்காக பனைகளிலிருந்து நுங்குகள் அதிகம் வெட்டப்படுவதால் இவ்வாண்டு பனங்கிழங்கு உற்பத்தி வீழ்ச்சியடையும் நிலை ஏற்படலாம் என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது பனங்காய் உற்பத்தி பருவகாலம் ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் நுங்குகள் அதிகளவில் வெட்டப்பட்டு வருகின்றன.

இதனால் பனங்காயின் உற்பத்தி குறைவடையும் நிலை ஏற்படுவதுடன் பனம் பொருள்களின் உற்பத்தியும் வீழ்ச்சியடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே, பனை மரங்களில் இருந்து நுங்குகளை அதிகளவில் வெட்டியெடுப்பதை மக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென தமிழீழ பொருண்மியத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர். (405)

# இராமநாதபுரத்தில் சிறுவர் நாடகப் பயிற்சிப் பட்டறை

வட்டக்கச்சி,ஜூன்20

இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலையில் சிறுவர் நாடகப் பயிற்சிப் பட்டறை ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

பாடசாலை முதல்வர் க.புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.கணேசலிங்கம், ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ்.விஜயநாதன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

முழுநாளாக நடைபெற்ற இப்பயிற்சி நெறியில் தரம் 3, 4, 5 ஐச் சேர்ந்த நூறிற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர். (405)

## வன்னிச் செய்திகள்

கிளிநொச்சி முல்

# முல்லையில் எரிபொருள் தட்டுப்பாடு மேட்டுநிலப் பயிர்ச் செய்கை பாதிப்பு

பரந்தன்,ஜூன் 20

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு தெற்கு கிராமங்களில் சிறுபோகத்தில் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக உற்பத்தி செய்த பயிர்களுக்கு தண்ணீர் இறைக்காமல் கைவிட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மண்ணெண்ணை வழங்குவதற்கு பயிர்ச்செய்கையாளரின் பெயர்ப் பட்டியலை சிபார்சு செய்து அனுப்பிவைக்குமாறு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்-

இதில் உடையார்கட்டு வடக்கு, தெற்கு, சுதந்திரபுரம் கிராமங்கள் புறந்தள்ளப்படுவதாகவும் இப்பகுதி விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உற்பத்தி மேற்கொண்ட பயிர்களைக் காப்பாற்றி விவசாயிகள் நஷ்டமடையாமல் இருப்பதற்கும், இப்பிரதேசத்திற்குத் தேவையான மரக்கறிவகைகளை உற்பத்தி செய்வதற்கும் சம்மந்தப்பட்டவர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும்-

ஏனைய கிராமங்களுக்கும், மண்ணெண்ணை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டது போன்று தவறவிடப்பட்ட கிராமங்களுக்கும் மண்ணெண்ணை வழங்குவதற்கு உரியவர்கள் ஆவன செய்யவேண்டும் என்றும்- விவசாயிகளால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (352)

# சிறுபோகப் பயிர்கள் பெரும் பாதிப்பு கட்டாக்காலிக் கால்நடைகள் காரணம்

பரந்தன்,ஜூன்20

சிறுபோகப் பயிர் உற்பத்தி கட்டாக்காலிக் கால்நடைகளால் அழிக்கப்பட்டுவருவதாகப் பயிர் உற்பத்தியாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட உடையார்கட்டுக் கிராமத்தில் பல சிரமங்களுக்கு மத்தியில் விவசாயிகளால் உற்பத்தி மேற்கொள்ளப்பட்ட நெல் மற்றும் சிறுதானியங்களைக் கட்டாக்காலிகள் இரவு பகல் வேளைகளில் அழித்து வருகின்றன.

கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தபோதும் கால்நடை வளர்ப்பாளர்கள் அவற்றைக்கட்டி வளர்ப்பதில் அக்கறை காட்டவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பசு மாடு, எருது மாடுகள், ஆடுகள் போன்றன பட்டியாக சேர்ந்து பயிர்ச்செய்கை மேற்கொண்ட பகுதிகளில் தங்கி நிற்பதையும் காண முடிகின்றது.

கட்டாலிக்காலி மாடுகளைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளர் கமக்கார அமைப்பினரின் ஒத்துழைப்புடன் பிடித்து கால்நடைகள் பராமரிக்கும் நிலையங்களில் பராமரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுவதோடு கால்நடை உரிமையாளர்கள் பிடிக்கப்பட்ட மாடுகளைப்பெற்றுச்செல்வதற்கும் அக்கறை காட்டுவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் கால்நடை உரிமையாளர்களின் அக்கறையீனம் காரணமாக சிறுபோகத்தில் மேற்கொண்ட பயிர் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (352)

## 'ஒக்ஸ்பாம்' நிதியில் மீனவருக்குப் படகு

புதுக்குடியிருப்பு. ஜூன்.20

முல்லைத்தீவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஒக்ஸ்பாம் நிறுவனம் ஒருதொகுதி மீன்பிடிப்படகு மற்றும் உபகரணங்களை வழங்கியுள்ளது முல்லைத்தீவு மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் சமாசத் தலைவர் அ.மரியதாஸ் தலைமையில் இந்த உபகரணங்கள் வழங்கும்நிகழ்வு இடம் பெற்றது. நிகழ்வில் பயனாளிகளுக்கான கடற்றொழில் உபகரணங்களை சமாச உபதலைவர் இ.தணிகாசலம், செயலாளர் பரமசிவம் மற்றும் ஒக்ஸ்பாம் நிறுவனத்தினர் ஆகியோர் வழங்கினர். (353)



புதுக்குடியிருப்பு கொக்கிளாய் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் முல்லைத்தீவு மாவட்ட மட்டத்தில் தெரிவாகிய சதுரங்க அணிகளுக்கான பயிற்சி நிகழ்வில் மாணவர்கள் பயிற்சியில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

(படங்கள்: வட்டக்கச்சி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FIFA WORLD CUP GERMANY 2006

# 18 ஆவது உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி

## பிரான்ஸின் வெற்றிக் கனவை தகர்த்தது தென்கொரியா

பிரான்ஸ், தென்கொரியா அணிகள் மோதிய லீக் போட்டி சமநிலையில் முடிந்தது. முதல் பாதியில் கோல் அடித்த பிரான்ஸின் வெற்றிக் கனவை, இரண்டாவது பாதியில் தென்கொரியா தகர்த்தது. இதன் மூலம் தொடர்ந்து இரண்டு லீக் போட்டிகளிலும் முன்னணி அணியான பிரான்ஸ் 2 புள்ளிகள் மட்டுமே பெற்று பின் தங்கியுள்ளது.

உலகக் கோப்பை கால்பந்து தொடரில் நேற்றுமுன் தினம் பிரான்ஸ், தென்கொரியா அணிகள் மோதின. 'ஜி' பிரிவின் முதல் லீக் போட்டியில் தென்கொரியா ஒரு வெற்றியையும், பிரான்ஸ் சமநிலையையும் பதிவு செய்து இருந்தன.

போட்டியில் வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயத்தில் களம் இறங்கியது பிரான்ஸ்.

போட்டியின் முதல் பாதியில் பிரான்ஸ் ஆட்டத்தை தன்கையில் எடுத்துக் கொண்டது. ஆட்டத்தின் 9 ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் சில்வைன் வில்டர்ட் அபாரமாகப் பாஸ் கொடுக்க, அதை பெற்றுக்கொண்ட தியரி ஹென்றி முதல் கோலை அடித்தார். தொடர்ந்து அபாரமான ஆட்டத்தைப் பிரான்ஸ் வீரர்கள் வெளிப்படுத்தினர். 28 ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் பேட்ரிக்கின் உதவியோடு கோல் அடிக்க முயன்ற ஹென்றியின் கனவு கைநழுவியது. ஆட்டத்தின் 26ஆவது மற்றும் 37 ஆவது நிமிடங்களில் தென்கொரிய அணிக்கு இரண்டு தடையற்ற உதை வாய்ப்பு கிடைத்தது. ஆனால் கொரிய வீரர்கள் அதை நழுவ விட்டனர். முதல் பாதியின் கடைசி நேரத்தில் பிரான்ஸுக்கு மற்றொரு அருமையான வாய்ப்பு கிடைத்தது. 32 ஆவது நிமிடத்தில் மூலையில் இருந்து ஜிடேன் அடித்த பந்தை, பேட்ரிக் தலையால் முட்ட அது கோல் கம்பத்துக்கு மிக அருகில் சென்றது. இமைப் பொழுதில் அதைத் தடுத்தார் தென்கொரிய கோல் காப்பாளர் லீவூன்-ஜா.



இரண்டாவது பாதியில் பிரான்ஸின் ஆட்டத்துக்குச் சரியான பதிலடி கொடுத்தது தென்கொரியா. தொடர்ந்து முயன்று வந்த தென்கொரியாவின் போராட்டத்துக்கு 81 ஆவது நிமிடத்தில் பலன் கிடைத்தது. கோஜின்-ஜா துல்லியமாக தலையால் முட்ட, பார்க்-ஜி-சங் அதை அருமையாகக் கோலாக்கினார். இறுதியில் பிரான்ஸ் கோல் அடிக்கக் கடும் முயற்சி செய்தும் முடியவில்லை. ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடிக்க போட்டி சமநிலையில் முடிந்தது. இதன் மூலம் இரண்டு லீக் போட்டிகளிலும் பிரான்ஸ் வெற்றியை எட்ட முடியவில்லை.

## ரொனால்டோவின் 'ரூப்' காலமானார்!



பிரேசிலைச் சேர்ந்த கால்பந்து நகைச் சுவை நடிகர் கிளாடியோ பெஸ்சர்மேன் வியன்னா (வயது 43) நேற்று முன்தினம் மாரடைப்பால் காலமானார். கால்பந்து இளம் ஜாம்பவான் ரொனால்டோவைப் போல் நடித்து பேசிக் காட்டுவதில் இவர் வல்லவர்.

இதனால் ஒவ்வொரு உலகக் கோப்பைப் போட்டியின் போதும் இவர் ஒரு கதாநாயகனாகிவிடுவார். கால்பந்து விளையாடிக் கொண்டிருந்த போதே, மயங்கிவிழுந்த இவர் அப்படியே உயிரிழந்தார். இவரது மறைவுக்கு ரொனால்டோவே இரங்கல் தெரிவித்தார். 'நான் மிகவும் அதிசயித்த மனிதர் அவர்' என்றும் ரொனால்டோ குறிப்பிட்டுள்ளார்.

மேடைகளிலும், பிரேசிலில் ஒளிபரப்பாகும் குளோபோ தொலைக்காட்சி மூலமும் இவர் நகைச்சுவை நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார்.

கால்பந்துப் பிரபலங்களை மட்டுமல்லாது அரசியல் பிரபலங்களைப் போலவும் பேசி சிரிக்க வைத்த இவர் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்திவிட்டார்.

## இன்றைய ஆட்டங்கள்

பிரிவு 'ஏ' - ஈக்குவடோர் - ஜேர்மனி இரவு 7.30 மணி
பிரிவு 'ஏ' - கோஸ்டாரிக்கா -போலந்து இரவு 7.30 மணி
பிரிவு 'பி' - சுவீடன் - இங்கிலாந்து அதிகாலை 12.30 மணி
பிரிவு 'பி' - பராகுவே - டினிடாட் அதிகாலை 12.30 மணி

## போட்டிக் கண்காணிப்பாளராக இந்திய மத்திய அமைச்சர்



பேர்லின், ஜூன்20

இந்தியக் கால்பந்து சம்மேளனத்தின் தலைவரும், அமைச்சருமான பிரியரஞ்சன் தாஸ் முன்ஷிக்கு, உலகக் கோப்பை போட்டியில் போட்டிக் கண்காணிப்பாளராகப் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

ஸ்பெயின் -துனிஷியா அணிகளுக்கு இடையே ஸ்ட்கார்ட்ல் நேற்று திங்கட்கிழமை நடந்த ஆட்டத்தின் போட்டிக் கண்காணிப்பாளராகப் பணியாற்றும் வாய்ப்பை முன்ஷிக்கு கொடுத்துள்ளது சர்வதே கால்பந்து சம்மேளனம்.

மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சராக உள்ளார் முன்ஷி. அமைச்சராகவும் இருந்துகொண்டு ஒருவர் உலகக் கோப்பை போட்டியில் பணியாற்றுவது மிக அரிதான விடயம் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆஸியை வீழ்த்தியது பிரேசில்

மியூனிச், ஜூன்20

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான லீக் போட்டியில் நடப்பு சாம்பியனான பிரேசில் 2-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. பிரேசில் அணி வீரர்களான அட்ரியனோ, பிரட் இருவரும் கலக்கலாக ஆடி அணிக்கு வெற்றி தேடிக் கொடுத்தனர். பிரேசில், ஆஸ்திரேலியா அணிகள் மோதிய லீக் போட்டி நேற்றுமுன்தினம் மியூனிச்சில் நடந்தது. முதல் போட்டியில் ஜப்பானை வீழ்த்தியதால் நம்பிக்கையுடன் களமிறங்கியது ஆஸ்திரேலியா. பிரேசிலை பொறுத்தவரை குரோஷியாவை முதல் போட்டியில் போராடி வீழ்த்தி இருந்தது. பலம் வாய்ந்த இரு அணிகள் மோதுவதால் ரசிகர்களின் பெரும் வரவேற்புடன் போட்டி தொடங்கியது.

ஆட்டத்தின் இரண்டாவது நிமிடத்திலேயே பிரேசிலுக்குக் கிடைத்தது தடையற்ற உதை வாய்ப்பு. ஆனால் அதைப் பிரேசிலின் காக்கா நழுவவிட்டார். 10 ஆவது நிமிடத்தில்நட்சத்திர வீரர், ரொனால்டோ, ஆஸ்திரேலியாவின் வின்ஸ் கெரல்லாவினால் காலில் ப[illegible]ாக தாக்கப்பட லேசான காயம் ஏற்பட்டது. இந்த முறையும் ரொனால்டோ பதட்டத்துடனே காணப்பட்டார். ஆட்டத்தின் 27 ஆவது மற்றும் 40 ஆவது நிமிடத்தில் அவருக்கு கிடைத்த வாய்ப்புகளை தவற விட பிரேசில் முதல் பாதியில் கோல்



எதுவும் அடிக்காமல் இக்கட்டான நிலையை அடைந்தது.

ஆஸ்திரேலிய அணியைப் பொறுத்த வரை பிரேசில் கோல் அடித்து விடக் கூடாது என்பதிலே கண்ணும் கருத்துமாக இருந்தது. குறிப்பாக ரொனால்டோவைச் சுற்றி பாதுகாப்பை பலப்படுத்தியது ஆஸ்திரேலியா.

இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கியது. ஆட்டம் ஆரம்பித்த 4 ஆவது நிமிடத்தில் பிரேசில் வீரர் அட்ரியானோ அற்புதமாக முதல் கோலை அடித்தார். நட்சத்திர வீரர் ரொனால்டோ தடைகளை மீறி கொடுத்த பந்தைப் பெற்றுக்கொண்ட அட்ரியானோ அடிக்க பிரேசிலின் நீண்ட போராட்டத்துக்குப் பலன் கிடைத்தது.

குரோஷியாவுக்கு எதிரான முதல் போட்டியில் 69 ஆவது நிமிடத்தில் வெளியேறிய ரொனால்டோ, நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் 72 ஆவது நிமிடத்தில் வெளியேறினார். அவருக்குப் பதிலாக மாற்று வீரராக ராபின்ஹோ களமிறங்கினார்.

பிரேசிலுக்கு பதிலடி கொடுக்க ஆஸ்திரேலிய அணியினர் எவ்வளவோ போராடினர். ஆனால் பலன் கிடைக்கவில்லை. ஆஸ்திரேலியக் கோல் காப்பாளர் மார்க் சுவார்சர் சிறப்பாகச் செயல்பட்டார். முன்னணி வீரர்களான நீல்,எமர்டான் ஆகியோரின் கோல் அடிக்கும் முயற்சி வீணானது. ஆட்டத்தின் 88 ஆவது நிமிடத்தில் பிரேசில் வீரர் அட்ரியனோ வெளியேற அவருக்கு பதிலாக பிரட் வந்தார். களமிறங்கிய சிறிது நேரத்தில் பிரட்டுக்கு கிடைத்தது அருமையான வாய்ப்பு. 90 ஆவது நிமிடத்தில் ராபின்ஹோ கோல் கம்பத்தை நோக்கி அடிக்க, அருகில் இருந்த பிரட் எளிதாக காலால் அடிக்க அது கோலாக மாறியது.

இறுதியில் பிரேசில் அணி 2-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. தொடர்ந்து இரண்டு லீக் போட்டிகளில் வெற்றி பெற்ற பிரேசில் 6 புள்ளிகள் பெற்றுள்ளது. இப்போட்டியில் தோல்வி அடைந்த ஆஸ்திரேலியா, குரோஷியாவுக்கு எதிரான மூன்றாவது லீக் போட்டியில் வெற்றிபெற வேண்டிய நிலையில் உள்ளது.

## சமநிலையில் முடிவடைந்தது ஜப்பான் - குரோஷியா ஆட்டம்

ஜப்பான், குரோஷியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது லீக் போட்டி, இரு அணி வீரர்களின் கடுமையான போராட்டத்துக்குப் பின் போட்டி சமநிலையில் முடிந்தது. குரோஷிய அணி பெனால்டி வாய்ப்பை வீணாக்கி, வெற்றியை நழுவவிட்டது.

ஜப்பான், குரோஷியா அணிகள் மோதிய லீக் போட்டி நூரம்பேர்க்கில் நேற்றுமுன்தினம் நடந்தது. முதல் போட்டியில் ஜப்பான், ஆஸ்திரேலியாவிடமும், குரோஷியா, பிரேசிலிடமும் தோல்வி அடைந்திருந்தன. இப்போட்டியில் வெற்றிபெறும் அணிக்கே இரண்டாவது சுற்றுக்குள் நுழைய வாய்ப்புக் கிட்டும் என்பதால் இரு அணிகளும் பரபரப்புடன் களமிறங்கின.

ஆட்டத்தின் முதல் தடையற்ற உதை வாய்ப்பை ஜப்பானும், மூலை உதை வாய்ப்பை குரோஷியாவும் பெற்றன. ஆனால் இரு அணிகளும் கோல் போடவில்லை. 20 ஆவது நிமிடத்தில் குரோஷிய வீரர் பெர்சா, ஜப்பானின் மியாமோட்டாவால் 'பெனால்டி' பகுதியில் முரட்டுத்தன்மாக தடுக்கப்பட, குரோஷியாவுக்கு கிடைத்தது 'பெனால்டி' வாய்ப்பு. குரோஷிய வீரர் டாரிஜோ சர்னாவுக்கு பெனால்டி அடிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. டாரிஜோ அடித்த பந்தை, கண் இமைக்கும் நேரத்தில் பாய்ந்து தடுத்தார் ஜப்பான் கோல் காப்பாளர் காவாகுச்சி. அரிய வாய்ப்பை நழுவ விட்டதால் குரோஷிய வீரர்கள் சோகமடைந்தனர்.

முதல் பாதியில் குரோஷிய அணிக்குக் கோல் அடிக்க பல வாய்ப்புகள் கிடைத்தன. மூன்றுமுறை குரோஷிய வீரர்கள் அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு வெளியேறியது. இது போதாதென்று ஜப்பான் அணியின் கோல் காப்பாளர் காவாகுச்சி துடிப்புடன் செயல்பட்டார். அவரை மீறி பந்து கோல் கம்பத்துக்குள் செல்ல முடியவில்லை. முதல் பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காமலேயே வெளியேறின.

இரண்டாவது பாதியில் ஆட்டம் பரபரப்பான கட்டத்தை எட்டியது. எப்படியாவது கோல் அடித்துவிட வேண்டும் என இரு அணி வீரர்களும் கடுமையாகப் போராடினர். ஆட்டத்தின் 49 ஆவது நிமிடத்தில் ஜப்பான் வீரர் காஜிஸ், யானகிசவாவிடம் அருமையான பாஸ் கொடுத்தார். இந்த வாய்ப்பும் கைநழுவியது. தொடர்ந்து 55 ஆவது நிமிடத்தில் ஜப்பானின் முன்னணி வீரர் நகுமாரா கோல் கம்பத்தை நோக்கி அடித்த பந்தும் குரோஷிய கோல் காப்பாளரிடம் தஞ்சம் புகுந்தது. இரண்டாவது பாதியில் ஜப்பானுக்கு இரண்டு தடையற்ற உதை வாய்ப்புகள் கிடைத்தன. இத்தனை ஜப்பான் வீரர்கள் நழுவவிட்டனர்.

இறுதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காமலேயே ஆட்டத்தை முடித்தன. இதன் மூலம் இரு அணிகளுக்கும் உலக கோப்பை தொடரின் இரண்டாவது சுற்றுக்குள் நுழைய வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாண்டின் இதய அஞ்சலிகள்

மண்ணில் மலர்ந்தது 28 - 02 - 1933



விண்ணில் உதிர்ந்தது 19 - 06 - 2003

**அமரர் கந்தையா சிவராசா** (சின்னக்கிளி)

(முன்னாள் ஊழியர் -யாழ். மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை)

வீதியிலே விழுந்து விட்டீர்
விழி நீரைச் சொரிந்து விட்டோம்
நாதியற்றுப் போனீரே நல்லவரே
நம் இதயம் கனக்கின்றது.
என்றும் அஞ்சலிக்கின்றோம்.

கட்டுவன்மேற்கு, பிள்ளையார் கோவிலடி, தெல்லிப்பழை. (51429)

அன்பு மனைவி சி.அன்னரத்தினம் பாசமிகு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 22 - 10 - 1975



ஆண்டவன் அடியில் 20 - 06 - 2003

**திருமதி நாமகள் சிவபாலன்**

(51427)

எம் குடும்ப விளக்கே!
நீ இறைவன் காலடி மலராகி
ஆண்டு மூன்று ஆனாலும் எம் - நினைவுகள் என்றும் ஒன்றே
உன் ஆத்மசாந்தி அடைய நுணுவில்
சிதம்பர விநாயகனைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்பிகா டிஸ்பென்சறி, சாவகச்சேரி. சரசாலை வடக்கு, சாவகச்சேரி. கணவர், பிள்ளைகள் குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவு நாள்

தோற்றம் 20 - 12 - 1929



மறைவு 30 - 06 - 2005

திருமதி **வைரவப்பிள்ளை தெய்வநாயகி**

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைரவப்பிள்ளை தெய்வநாயகியின் ஓராம் ஆண்டு நினைவஞ்சலியும் மதியபோசனம் இன்று (20.06.2006) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் எமது அன்பு உள்ளங்களை நினைவஞ்சலிப் பிரார்த்தனையிலும் மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

T.P.:0712307601, 0776660723 (சி-49750)(21 -குடும்பத்தினர்.

சுன்னாகம் கிழக்கு,சுன்னாகம்

## தென்மராட்சி அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி வலய பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தென்மராட்சி வலயத்தில் நடைபெற வுள்ளது.

கடந்த 16ஆம் திகதி நடத்தப்பட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடலில் பங்குபற்றாத பாடசாலை அதிபர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

## அறநெறிப் பாடசாலை ஆசிரியரின் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 20

வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணப் பிரதேசங்களில் இதுவரை சீருடைகள், இசைக் கருவி, ஒலிப்பேழை, புத்தகம் என்பவற்றை பெறாத அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்களை இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் நாவலர் மண்டபத்திற்கு வந்து பொருள்களைப் பெற்றுக் கொள்ளு மாறு வலிகாமம் இந்து சமய அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் கேட்டுள்ளார்.(204)

## முன்பள்ளி திறப்பு

அரச சிறுவர் இல்ல சிறுவர்களைப் பராமரிப்பதற்கான புதிய முன்பள்ளிக்கட்டடம் சமீபத்தில் கைதடியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த பாலர் பகல் முன்பள்ளியை கடந்த வியாழக்கிழமை 10 மணிக்கு சிறுவர் நன்நடத்தைப்பிரிவு ஆணையாளர் திருமதி றஞ்சினி நடராசபிள்ளை நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இப்பராமரிப்பு நிலையத்தில் பிரதேச சிறார்களும் நன்மைபெறமுடியுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரி)

## திண்மக் கழிவகற்றல் விசேட செயற்றிட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்20

திண்மக் கழிவகற்றல் தொடர்பான விசேட விழிப்புணர்வு செயற்றிட்டம் நேற்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுகாதார மேற்பார்வையாளர்கள், சுகாதாரப் பாதுகாவலர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள் போன்ற அனைத்துத் தரப்பினரும் இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னோடியாக ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் சுகாதாரப் பரிசோதகர்கள் தலைமையில் யாழ். மாநகர சபையின் 9 வலயங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ரி)

## ஆக்கக் கலைகள் பயிற்சிநெறிக் கூட்டம்

வலுவிழந்தோருக்கான ஆக்கக் கலைகள் சுயதொழில் வேலைவாய்ப்பு பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்தோருக்கான கூட்டம் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களைத் தங்கள் பிரிவு சமூகசேவை உத்தியோகத்தர்களுடன் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்திக்கு முன்பாகவுள்ள பயிற்சி நிலையத்தில் சமுகமளிக்குமாறு மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார். (190-ரி)


முகாமைத்துவ உதவியாளர்
அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர்
மற்றும் ஏனைய போட்டிப் பரீட்சைகளிற்கான வகுப்புகள் 21.06.2006 ஆரம்பமாகின்றன.
*பொது உளச்சார்பு, மொழியறிவு
த.தவசேகர் B.Sc., P.G.D.E., P.G.D.P.
புதன், வியாழன் காலை 6.45 - 7.45
Science Hall கன்னாதிட்டி, யாழ்.நகர்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்று பிற பாடசாலைகளில் உயர்கல்வியைக் கற்று க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

8A யும் அதற்கு மேற்பட்ட பெறுபேறுகளையும் பெற்ற மாணவர்களை 23.06.2006 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலையில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-49754) யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலைச் சமூகம்


**After A/L...**
இறுதியாண்டு UK or Australia
ஆரம்பக்கல்வி Malaysia
Computer Scinece | Management Technology | Business Studies | Engineer



- வேலை செய்து கொண்டு படிக்கலாம்.
- இறுதியாண்டை விருப்பம் போல் UK அல்லது Australia வில்
- கற்பதற்குரிய VISA ஏற்பாட்டை Malaysian University செய்து தரும்.
தனிப்பட்ட கல்வித்தகைமைகளுக்கமைய Exemption வழங்கப்படும்.
- July/August Admission, உணவு, விடுதி, Visa அனைத்தும்
- உடனடியாக செய்து தரப்படும்.
- மலேசிய பிரதிநிதியை (23 June 2006) வரை கொழும்பில் சந்தித்து ஜூலை 2006 Semesterக்கான பதிவுகளை மேற்கொள்ளலாம்.

GoodWIN Ads

UK UNIVERSITY இனால் அங்கீகரிக்கப்பட்ட University College
பதிவுகளுக்கு: 0785-403430 0785-246887
இரண்டு வாரத்தில் பயணம்


## மரண அறிவித்தல்

### தம்பையா அருணாச்சலம்

யாழ்ப்பாணம், சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா அருணாச்சலம் அவர்கள் 18.06.2006 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் செல்லாச்சிப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை), கனகரத்தினம் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), குமாரதாசன் (நாதன் இங்கிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுஜாதா (ஜேர்மனி), சுகுமார் (இங்கிலாந்து), சுரூபன் (சுஜந்தன் - ஜேர்மனி), நிர்மலன் (ராஜன் -ஜேர்மனி), ரவிசங்கர் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தை யும் உதயகுமார் (றமணன்- ஜேர்மனி), பாலாம்பிகை (பபி - இங்கிலாந்து), றேஷ்மா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமனும் சச்சிதானந்தன் (இளைப்பாறிய இராணுவதாதி) சுனேந்திரகுமாரி (ஆஸ்திரேலியா), சறோஜினிதேவி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனரும் வாகீசன், வாசுகி (ஜேர்மனி), விதுர்ஷன், வியாசன் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2006) செவ்வாய்க்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் (591, காலி வீதி) இடம்பெற்று, பூதவுடல் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.5 N , அரச தொடர்மாடி, பம்பலபிட்டிய
தொலைபேசி 2553925 (57424)

தகவல்: குடும்பத்தினர்.


உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான BBS இன்
ஆங்கில பாட நெறிகளுக்கான விசேட வகுப்புக்கள்
* COMMUNICATION SKILLS * CERTIFICATE IN ENGLISH * DIPLOMA IN ENGLISH
சிறார்களுக்கான ஆங்கிலப் பாட நெறிகள் 5+ to 14+ சிறார்களுக்கு
BBS இன் யாழ்ப்பாணம் மற்றும் வளாகங்களில் வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் நடைபெறும்
Pre-Foundation
Foundation
Lower Intermediate
Intermediate
Upper Intermediate
IELTS by Top Lecturer
ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலை
வயது 2+ முதல் வயது 3 வரை Play Group
வயது 3+ முதல் வயது 4 வரை Montessori
வயது 4+ முதல் வயது 5+ வரை Pre-School
விசேட அம்சங்கள்
* ஆங்கில மொழிமூலமான சிறந்த கற்பித்தல்.
* தமிழ் கட்டாய பாடமாக கற்பிக்கப்படும்.
* பிள்ளைகளின் தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தும் வருடாந்த நிகழ்வுகள்.
* முன்பள்ளியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுவார்.
BRITISH BUSINESS SCHOOL
இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | Dr.ஸ்ரீ பத்மநாதன் இல்லம், [illegible] | இல:174,கண்டி வீதி, யாழ்ப்பாணம். | இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி,மானிப்பாய்.
HOT LINE : 021-222-5796
British BUSINESS SCHOOL Where Students Come First


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அகதிகளைப் பாதுகாப்பாக அழைத்துவர இந்திய அரசு முன் வரவேண்டும்

## மத்திய அரசிடம் விஜயகாந் கோரிக்கை

சென்னை, ஜூன்20

இலங்கையிலிருந்து அகதிகளாக வரும் தமிழர்களைப் பாதுகாப்பாக அழைத்து வர மத்திய அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று தேசிய முற்போக்கு திராவிட கழகத் தலைவர் நடிகர் விஜயகாந் வலியுறுத்தியுள்ளார்.

அப்பாவி தமிழர்களுக்கு உதவ மத்திய அரசு முன்வராவிட்டால் ஆதரவற்ற இலங்கைத் தமிழர்களைக் காக்க எமது கட்சி ஜனநாயக முறையில் நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அநுராதபுரம் மாவட்டத்தில் கண்ணி வெடியில் சிக்கிய பஸ் வெடித்து சிதறியதில் 64 பேர் உயிரிழந்தது ஆழ்ந்த வேதனைக்கு உரியது. தமிழர்கள் வாழும் பகுதியில் விமானப் படை மூலம் தாக்குதல் நடத்துவது எந்த நாகரிக அரசும் எடுக்காத ஒரு நடவடிக்கையாகும். விமானப்படை மூலம் தாக்குதல் நடத்தும்போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவது உறுதி.

தமது சொந்த மக்களையே வானத்தில் இருந்து குண்டு மழை பொழிந்து கொலை செய்யும் போக்கை மனிதாபிமான முறையில் தடுத்து நிறுத்த இந்திய அரசு இலங்கை அரசுக்கு அறிவுறுத்தல் வேண்டும்.

இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக அங்குள்ள தமிழ் மக்கள் உயிர் தப்பிக்க இந்தியாவுக்கு அகதிகளாக வரத் தொடங்கியுள்ளனர். படகுகள் மூலம் அவர்கள் வரும்போது இரு நாட்டு அரசுகளாலும் தடுக்கப்பட்டு பாதி வழியிலேயே அவர்கள் கடலில் விழுந்து சாகும் நிலையுள்ளது.

1958 கலவரத்தின்போது அன்றைய பிரதமர் நேரு இந்தியக் கப்பலை அனுப்பி கொழும்பிலிருந்து தமிழ் மக்களை மீட்டு யாழ்ப்பாணத்திற்கு பாதுகாப்பாக கொண்டுவந்தார். 1983 இல் இந்திய அரசின் கப்பல்கள் மூலம் அகதிகள் இந்தியாவுக்கு அழைத்து வரப்பட்டு பின்னர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

அதுபோன்று தற்போதும் இலங்கையிலிருந்து வரும் தமிழ் அகதிகளை பாதுகாப்பாக அழைத்துவர இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது.

# பயங்கரவாதத்தை சகிக்கக் கூடாது ஆசிய நாடுகளுக்கு இந்தியா அழைப்பு

மாஸ்கோ, ஜூன் 20

ஆசியக் கண்டத்தில் அமைதியையும் பாதுகாப்பையும் பராமரிக்க வேண்டுமானால் ஆசிய நாடுகள் அனைத்தும் பயங்கரவாதத்தை சகிக்கக்கூடாது என இந்தியா வலியுறுத்தியது. கஜகஸ்தானின் முன்னாள் தலைநகர் அலமாட்டியில் ஆசிய நாடுகளுக்கு இடையே நம்பகத் தன்மையை கட்டுவதற்கான மாநாடு சனிக்கிழமை நடைபெற்றது. இதில் ரஷ்ய அதிபர் புடின், சீன அதிபர் ஹூஜிந்தாவோ, பாகிஸ்தான் அதிபர் முஷாரப், மத்திய ஆசிய நாடுகளின் தலைவர்கள், ஆப்கானிஸ்தான், எகிப்து, இஸ்ரேல், பாலஸ்தீனம், துருக்கி, தாய்லாந்து, தென்கொரியா நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். இந்தியப் பிரதமர் சார்பில் மத்திய பெற்றோலியத்துறை அமைச்சர் முரளி தியோரா கலந்துகொண்டு பேசினார் அப்போது அவர் கூறியதாவது:

நோக்கம் எவ்வளவு புனிதமானதாக இருந்தாலும் அப்பாவி மனிதர்களையும் குழந்தைகளையும் பயங்கரவாத நடவடிக்கை மூலம் கொல்வதை நியாயப்படுத்த முடியாது. ஆசியக் கண்டத்தின் பொதுவான அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஒரே சிந்தனையுடன் நமது முயற்சிகளை இருமடங்காக அதிகரிக்க வேண்டியது அவசியம். 1947ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்து முதல் ஆசிய நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை அதிகரிக்கும் முயற்சியில் இந்தியா முன்னணி வகிக்கிறது - என்றார்.

# டிஸ்கவரி விண்வெளி ஓடம் ஜூலை ஒன்றில் பயணம்

கேப் கேனவரல், ஜூன்20

டிஸ்கவரி விண்வெளி ஓடம் ஜூலை மாதம் முதலாம் திகதி விண்ணில் பறப்பதற்கு அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையம் அனுமதி அளித்துள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையம் 'நாசா' கடந்த 2003ஆம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்பிய 'கொலம்பியா' ஓடம் விபத்துக்குள்ளானதில், அதில் இருந்த இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா உட்பட ஏழு விண்வெளி வீரர்கள் பலியாகினர். அதன் பின்னர், கடந்த 2005ஆம் ஆண்டு ஜூலை மாதம் 'டிஸ்கவரி' விண்வெளி ஓடம் விண்ணில் ஏவப்பட்டது. அப்போது இந்த விண்கலத்தின் எரிபொருள் தாங்கியில் இருந்த பாதுகாப்பு தகடுகள் கீழே விழுந்தன. இதையடுத்து, ஓடத்தில் கூடுதலாக சில மாற்றங்களைச் செய்வதற்காக விண்வெளி ஓடத்தின் பயணத்தை விஞ்ஞானிகள் ரத்து செய்தனர்.

விண்வெளி ஓடத்தின் எரிபொருள் தாங்கியை மறுவடிவமைப்பு செய்ய, சிறப்பு குழு அமைக்கப்பட்டது. விண்வெளி ஓடத்தில் கூடுதலாக செய்யப் பட்ட சில மாற்றங்கள் முடிவடைந்து, அடுத்த மாதம் முதலாம் திகதி டிஸ்கவரி விண்வெளி ஓடத்தை விண்ணிற்கு அனுப்ப 'நாசா' முடிவு செய்துள்ளது.

அதே நேரத்தில், டிஸ்கவரி ஓடத்தை விண்ணில் செலுத்த நாசா மையத்தின் மூத்த பாதுகாப்பு அதிகாரி மற்றும் இன்ஜினியர் ஆகியோர் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

டிஸ்கவரி ஓடம் விண்ணில் செலுத்தப்படுவதற்கு முன், அதில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் போதுமானதா? என்பது தொடர்பாக விவாதங்கள் நடந்து வருகிறது. இந்த நிலையில் நிருபர்களுக்கு பேட்டியளித்த நாசா மையத்தின் நிர்வாகி மைக்கேல் ஒரிபன், டிஸ்கவரி விண்வெளி ஓடம் விண்ணில் செலுத்துவதற்கு முழு தகுதி பெற்றுள்ளதா? இல்லையா? என்பது பற்றி மாறுபட்ட கருத்துகள் உள்ளன.

விண்வெளி ஓடத்தை விண்ணில் செலுத்துவது தொடர்பாக, நாசா விஞ்ஞானிகள் தெரிவித்த பரிந்துரைகள் அனைத்தையும் ஏற்க முடியாது. ஓடம் விண்ணில் செலுத்தப்பட வேண்டுமானால், விஞ்ஞானிகளின் இழப்பு அல்லாத வேறு சில அபாயங்களைச் சந்திக்கத் தான் நேரிடும்'' என்றார்.

# ஏவுகணை சோதனை நடத்தினால் வடகொரியா மீது தடை விதிப்பு

## ஜப்பான் எச்சரிக்கை

டோக்கியோ, ஜூன்20

வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தினால் அதன் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்று ஜப்பான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடகொரியா ஏவுகணை சோதனை நடத்த ஆயத்தமாகி வருவதாக அந்நாட்டு தொலைக்காட்சியில் செய்தி வெளியாகியுள்ள நிலையில் ஜப்பான் இந்த எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடகொரியா ஏவுகணை சோதனை நடத்துவதை கடுமையாக எதிர்ப்போம். அவ்வாறு சோதனை நடத்தப்பட்டால் எங் களது பதில் நடவடிக்கை கடுமையாக இருக்கும். இந்த விடயத்தில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கும் கொண்டு செல்வோம் என்று ஜப்பான் வெளியுறவு அமைச்சகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது.

ஏவுகணை சோதனையை வடகொரியா நடத்தினால் அதன் மீது பொருளாதாரத் தடை விதிக்க உடனடியாக தேவையான நடவடிக்கை மேற்கொள்வோம் என்றும் -

ஜப்பான் வெளியுறவு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

# நால்வர் கைது

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களெனச் சந்தேகித்து தமிழ் இளைஞர்கள் நான்கு பேரை தெனியாய பொலீஸார் நேற்றுக் காலை கைது செய்திருக்கின்றனர்.

இவர்களிடமிருந்து வீடியோ கமெராக்கள், புகைப்படக் கருவிகள் மற்றும் பல உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன எனவும், நான்கு இளைஞர்களும் ஹட்டன் மற்றும் வெலிமடைப் பகுதிகளைச் சேர்ந்தவர்களெனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

தெனியாய நகரில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிக் கொண்டிருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் ஏதேனும் தொடர்புகள் இருக்கின்றனவா என்பது குறித்த விசாரணைகள் நடைபெற்று வருகின்றன எனத் தெனியாயப் பொலீஸார் தெரிவித்தனர். (க)

## தவறிவிட்டது

மாவடி ஆலய வீதி, சங்கானையைச் சேர்ந்த கயமுகவரதன் கானப்பிரியா என்பவருடைய தே.அ.அ.இல. 827022128V முத்திரைச்சந்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரும் மினிபஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்ரான்லி வீதி, வர்த்தக வங்கியில் பணிபுரியும் வி.மதியூகனிடம் ஒப்படைக்கவும்.

## ஒத்துமாறல்

கொழும்பு வலயத்தில் கடமையாற்றும் நடன பட்டதாரி ஆசிரியர் ஒருவர் யாழ்ப்பாணத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு :- 077 6910525.


நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

(சி-49188)

காட்சி நேரம் : 10.30, 2.30

சத்தியராஜ் (மாறுபட்ட 9 வேடம்), சூசன், விவேக், அப்பாஸ் நடித்த

"வணக்கம் தலைவா"

ராஜா யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த

பட்டியல்

புதிய வெளியீடு

(சி-47139)

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்


## இந்துமத குருமார்களுக்கான விஷேட அடையாள அட்டை விநியோகம்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் வேண்டுகோளுக்கேற்ப இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்து மதகுருமார்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

எமது அமைப்பினூடாக விண்ணப்பித்த 50 விண்ணப்பதாரர்களின் (1ஆம் கட்டம்) விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன. விண்ணப்பதாரர்கள் எமது அமைப்பின் பொதுச் செயலாளருடன் தொடர்புகொண்டு தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்தி விசேட அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேலும் இதுவரை விண்ணப்பிக்கத்தவறிய குருமார்களும் அன்றைய தினமே பதிவினை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இடம்: ''வேதாந்த மடம்''

இல. 18, குமாரசாமி லேன், திருநெல்வேலி.

காலம்: நாளை (21.06.2006) புதன்கிழமை

ஆரம்பம்: பிற்பகல் 2 மணி.

(51443)


புதிய வெளியீடு



புனிவர்சிட்டி புகழ் ஜீவன், சோனியா அகர்வால், விவேக் நடித்த

திருட்டு பயலே

மனோகரா


## கண்ணீர் அஞ்சலி

எமது கழக ஸ்தாபகர்களில் ஒருவரான

சதானந்தன் மனோராஜ் அவர்களின்

அன்புத் தந்தை இராஜா சதானந்தன்

(இளைப்பாறிய உத்தியோகத்தர் விவசாயத்திணைக்களம், தொழில் திணைக்களம்) அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன், கொக்குவில். வளர்மதி முன்னேற்றக்கழகத்தினர்.

(சி-49758)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியை

திருமதி ய்சிந்தா கலிஸ்ரஸ் அவர்களின்

அன்புத் தந்தை

மரியாம்பிள்ளை நீக்கிலாப்பிள்ளை

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்

புனித பத்திரிசியார் கல்லூரி.

(51439)

## மரண அறிவித்தல்கள்

### முருகன் நற்குணம் (குணம்)

மல்லாகம், முடவேம்படியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, பரவிப்பாஞ்சான், 4ஆம் வாய்க்காலை வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் நற்குணம் அவர்கள் நேற்று (19.06.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகன் - செல்லம்மா தம்பதியரின் புதல்வனும் மதுரத்தின் அன்புக் கணவரும் செல்லத்துரை, செல்வரத்தினம், செல்வம், தவமணிதேவி (கிளிநொச்சி), சரஸ்வதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தமோதரம்பிள்ளை (கிளிநொச்சி) விநாயகம்பிள்ளை (கிளிநொச்சி), வாசுதேவன் (ஜேர்மனி), இந்திராணி (கிளிநொச்சி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2006) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கிளிநொச்சி திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சி.தாமோதரம்பிள்ளை (வவா - மைத்துனர்)

4ஆம் வாய்க்கால், பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி.

(51442)

### கதிரவேலு பாலசிங்கம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பாலசிங்கம் அவர்கள் 18.06.2006 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - (பொறியியலாளர் - மலேசியா) கல்வீட்டுப் பாக்கியத்தின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தனலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் பாசமிகு கணவரும் கதிர் (பொறியியலாளர் - லண்டன்) அவர்களின் அன்புத் தந்தையும் நளினரஞ்சனியின் (ரூபி) அன்பு மாமனும் துவாரகாவின் அன்புப் பேரனும் திரு திருமதி நடராஜா (பொறியியலாளர் - மலேசியா) அவர்களின் மருமகனும் திருமதி நாகராசா இரஞ்சிதத்தின் பெறாமகனும் நடராசா (மலேசியா), திருமதி தேவராசா செல்வராணி (ஆசிரியர் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மகன்.

(சி- 49759)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டை ரயில் நிலையத்தில் குண்டுப் பொதி புரளியால் பீதி!

கொழும்பு, ஜூன்20

அநாதரவாகக் கிடந்த பொதி ஒன்றினால் கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தில் நேற்றுக் காலை பெரும் பதற்றம் ஏற்பட்டது. குண்டு அச்சம் காரணமாக மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

திருகோணமலையில் இருந்து நேற்று முன்தினம் கொழும்பு வந்த தபால் ரயிலில் மர்மமான பொதியொன்று இருப்பதாக கோட்டை ரயில் நிலைய அதிபருக்கு அறிவிக்கப்பட்டது. இதற்கிடையில் அது 'குண்டுப் பொதி' என மற்றுமொரு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து ரயில் நிலையத்திலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் இருந்த மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

அதேவேளை, இது குறித்தான தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த குண்டு செயலிழக்கச் செய்யும் இராணுவத்தினர், மிகுந்த பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட பொதியை மீட்டனர். குறிப்பிட்ட பொதியில் இரண்டு பற்றறிகள் இருந்தமை தெரியவந்தது. இந்த பற்றறிகள் பின்னர் ஆய்வுக்காக எடுத்துச் செல்லப்பட்டன.

பின்னர் குண்டு அச்சம் நீங்கி கோட்டை ரயில் நிலையப் பகுதிகளில் இயல்பு நிலை திரும்பியது.

## போராளி வீரச்சாவு

கிளிநொச்சி, ஜூன்20

திருமலை, மூதூரில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் லெப்டினன்ட் சுடர்வண்ணன் என்பவரே வீரச்சாவடைந்துள்ளார்.

சிதம்பரநாதன் தினேஷ்குமார் என்ற இயற்பெயரைக் கொண்டவரான இவர் கிளிவெட்டி, மூதூரைச் சொந்த இடமாகக் கொண்டவர். தற்காலிகமாக முல்லைத்தீவு மாவட்டம் உடையார்கட்டில் வசித்து வந்தார். (ம)

## போர் மூண்டால்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தீவில் அமைதி உருவாகி இருக்கும். தமிழ் மக்களினது உரிமைகள் நீண்டகாலமாக மறுக்கப்பட்டுவரும் நிலையில் இந்தத் தீவில் அமைதி ஏற்படாது.

தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதை நிறுத்துவதுதான் பதற்றத்தைத் தணிக்க ஒரே வழி. ஸ்ரீலங்கா அரசுதான் ஒப்புக்கொண்டபடி அதன் துணை இராணுவக் குழுக்களினது ஆயுதங்களைக் களைய வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசு மற்றும் சிங்களத் தரப்புடன் பேச்சுகளை நடத்தி தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் உரிமைகளையும் வென்றெடுக்கவே நாங்கள் முயற்சிக்கின்றோம்.

ஆனால், இவை நிராகரிக்கப்பட்டு தமிழ் மக்கள் மீது மற்றொரு போர் திணிக்கப்பட்டால் நாம் ஒரு உறுதியான நிலைப்பாட்டுக்குச் செல்ல நேரிடும் - என்றார் சு.ப. தமிழ்ச்செல்வன். (க)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட்டுள்ள இவர், நேற்று தமது பொறுப்பை ஏற்றுக்கொண்டார் எனக் கிளிநொச்சி செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் அமைப்பு இராணுவப் பேச்சாளர் ஒருவரை நியமித்திருப்பது இதுவே முதல் தடவையாகும். (ம)

## இலங்கை விவகாரத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்ப்பைக் கொண்டிருந்தோம். இந்த எதிர்பார்ப்பு நிறைவேறாமல் இன்று இரு சாராரும் மீண்டும் மோதிக்கொள்ளும் நிலை அங்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் அங்கு வாழும் அப்பாவி மக்கள் கண்ணிவெடிகளுக்கும், விமானத் தாக்குதல்களுக்கும் உள்ளாகிக் கொல்லப்படும் சம்பவங்கள் தற்போது அதிகரித்துள்ளன. இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாகத் தமிழகம் வந்து குவிகின்றனர். இதனால், இந்தியா - இலங்கையில் வாழும் மக்களின் மனதில் பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

தற்போது அங்கு தோன்றியுள்ள பிரச்சினைகளால் விரும்பத்தகாத பல்வேறு விபரீதமான நிகழ்வுகளும் - வேதனைகளும் தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றன. எனவே, இவற்றையெல்லாம் ஆழமாக எண்ணிப் பார்த்து இலங்கையில் அமைதி பிறக்க இந்திய அரசு ஆவண செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

இதேவேளை, தமிழ் நாட்டு மீனவர்களுக்கு இலங்கை இராணுவத்தால் தொடர்ந்து இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளை நிறுத்தவும் - அந்த மீனவர்களுக்கான உயிர், உடைமை, உரிமை ஆகியவற்றுக்கு உத்தரவாதம் அளிக்கவும் இந்திய - இலங்கை அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம்.

- இப்படி அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தீர்மானத்தில் ஆளும் கட்சிக் கூட்டணிகளின் சார்பில் கலைஞர் கருணாநிதி, சுதர்சனம், ராமதாஸ், கி. வீரமணி, டி.கே. ரங்கராஜன், தா. பாண்டியன், காதர் மொய்தீன் ஆகியோர் கையொப்பம் இட்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த தமிழக முதல்வர் இத் தீர்மானம் குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்கும் வரையில் இந்தியப் பிரதமரைத் தாம் தொலைபேசியில் நேரடியாகத் தொடர்புகொண்டு பேசுவார் என்றும் -

தனிப்பட்ட முறையில் இவ்விடயம் குறித்து அதிக அக்கறை காட்டுவார் என்றும் - தெரிவித்தார் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

## மணலாற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சியில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அலுவலகத்தில் வைத்து இச் சடலங்கள் விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்பட்டன. முல்லைத்தீவு, மணலாறு காட்டுப் பகுதி யில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்கக் காவலரண்களைத் தாக்குவதற்காக இராணு வத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் அணியின் இந்தச் சிப்பாய்கள் ஊடுருவியிருந்தனர். நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும், இத்தாக்குதலின்போது உயிரிழந்த சிப்பாய்கள் இருவரின் சடலங்களும், அவர்களின் ஆயுதங்களும் தங்களால் கைப்பற்றப்பட்டன என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

ரி-56 ரக துப்பாக்கிகள் - மூன்று, கைக்குண்டுகள் - நான்கு, ஒரு தொகுதி ரவைகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஏற்கனவே, கடந்த வாரம் மட்டக்களப்பில் இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் படையணியின் தாக்குதல் முயற்சி ஒன்றைப் புலிகள் முறியடித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## பிச்சைக்கார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டார் என மட்டக்களப்பு பொலீஸார் தெரிவித்தனர். இவரின் தலை மற்றும் மார்பில் நான்கு துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்திருந்தன எனக் கூறும் பொலீஸார் 9 மில்லிமீற்றர் ரக கைத்துப்பாக்கியே இந்தச் சூட்டுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக வும் தெரிவித்தனர்.

சுடப்பட்ட நபரின் சட்டைப் பையிலிருந்து கையடக்கத் தொலைபேசி ஒன்றையும் பொலீஸார் மீட்டுள்ளனர். பிச்சைக்காரர் என்ற போர்வையில் மட்டக்களப்பு நகரில் பல மாதங்களாகச் சுற்றித் திரிந்த இந்த நபர் கருணா குழுவினரின் உளவாளியென்பது விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதாம்.

இந்தச் சம்பவம் குறித்து மட்டக்களப்பு பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

புலிகளின் 'பிஸ்ரல் குழு' இத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

**ஒத்துமாறல்**

கண்டி நகரின் தேசிய பாடசாலையில் கற்பிக்கும் விஞ்ஞான பாட ஆசிரியர் யாழ். மாவட்ட தேசிய பாடசாலை ஒன்றுக்கு ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு :- 021 222 3717, 0776591780.

நாவலர் வெளியீடு NAVALAR PUBLICATION
2ஆம் தவணைக்கான பரீட்சை
தரம் 1 முதல் O/L வரை
பரீட்சை இம்மாதம் 24ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில்....
★ வெளிமாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றலாம்.
★ வினாத்தாள்களைப் பெறவிரும்பும் கல்வி நிலையங்கள், பிரத்தியேக வகுப்புகள் 21.06.2006இற்கு முன் தொடர்புகொள்ளவும்.
★ பரீட்சைக்குப் பின் வினாத்தாள்கள் பெற்றுக்கொள்ளும் இடங்கள்
★ நாவலர் இன்ஸ்ரிரியூட் - ஆனைப்பந்தி
★ பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P. No: 222 8068, 0777 243527.

# இராணுவத்தின் தாக்குதலுக்கு நாகர்கோவிலில் புலிகள் பதிலடி

கிளிநொச்சி, ஜூன்20

நாகர்கோவில் பகுதியில் இராணுவம் நடத்திய தாக்குதலுக்கு தாம் பதிலடி கொடுத்துள்ளனர் என்று புலிகள் நேற்று அறிவித்தனர்.

இது குறித்து விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாகர்கோவில் பகுதியில் நேற்று திங்கட்கிழமை மாலை 5.45 மணியளவில் எமது காப்பரண்களில் வேலை செய்து கொண்டிருந்த போராளிகள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் வலிந்து எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனையடுத்து எமது தரப்பில் இழப்புக்களைத் தவிர்ப்பதற்காக இராணுவத்தினர் மீது பதில் எறிகணைத் தாக்குதல் நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தாக்குதல் சுமார் 30 நிமிட நேரம் நீடித்தது என்று - தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளின் செயலகத்தைத் தாக்கும் முயற்சி அம்பாறையில் முறியடிப்பு

அம்பாறை, ஜூன் 20

அம்பாறை மாவட்டத்தில் தமது கட்டுப்பாட்டுப் பகுதியான பாவட்டை என்ற இடத்திலுள்ள புலிகளின் மாவட்டச் செயலகம் மீது அரச படையினர் மேற்கொண்ட தாக்குதல் முயற்சி முறியக்கப்பட்டு விட்டதாக புலிகள் நேற்று அறிவித்திருக்கின்றனர்.

காஞ்சிரங்குடா விசேட அதிரடிப் படையினரும், துணைப் படைகள் சிலவும் இணைந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மேற்படி தாக்குதலை நடத்தின எனவும், இதன்போது நடத்தப்பட்ட பதில் தாக்குதலில் படையினர் பின்வாங்கிச் சென்றனர் எனவும் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஜெயா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் குறித்துப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு மூன்று தடவைகள் அறிவித்த போதும், அவர்கள் அப்பகுதிக்கு வரவில்லை எனவும் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தத் தக்குதல் சம்பவத்தின் பின்னர் காஞ்சிரங்குடாப் பகுதியில் இருந்த 13 விவசாயிகளை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## வன்முறைகளைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது குறித்துக் கேட்டபோதே விடுதலைப் புலிகளின் தலைமையுடன் நெருங்கிய தொடர்புடைய வட்டாரங்கள் இவ்வாறு தெரிவித்தன.

அவை மேலும் கூறியதாவது:-

"அரசு தமிழ் மக்கள் மீது பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் ஒன்றைக் கட்டவிழ்த்து விட்டு மக்களைக் கொன்றொழித்து அனர்த்தம் புரிந்து வருகின்றது. இந்நிலையில் அந்த அரசுடன் போய் அமர்ந்திருந்து நாம் பேச்சு நடத்துவது என்பது மிகவும் கேலிக் கூத்தான விடயமாகும்.

"ஆகவே, மக்களுக்கு எதிரான வன்முறைகளை அரசுப் படைகளும் அவற்றின் ஒட்டுக் குழுக்களும் முதலில் நிறுத்தவேண்டும்.

"ஏற்கனவே இணங்கியபடி ஒட்டுக் குழுக்ளின் ஆயுதங்களைக் களையவும் அவற்றைத் தமிழர் தாயகத்திலிருந்து அகற்றவும் அரசு இதய சுத்தியோடு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"அப்படி ஒரு நிலைமை ஏற்பட்ட பின்னர்தான் அமைதிப் பேச்சுகளை முன்னெடுக்கக் கூடிய சூழல் ஏற்படும்.

"ஒரு புறம் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டு மறுபுறம் அமைதிப் பேச்சுக்கு அரசுத் தரப்பு அழைப்பது கேலிக் கூத்தான விடயம்."

- இவ்வாறு அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க)

## கண்காணிப்பாளர்களுக்காக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு வழிசெய்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து இணங்கியமையைத் தொடர்ந்து, இந்த ஐந்து நோர்ட்டிக் நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் கடந்த நான்கரை ஆண்டுகளாக இப்பணியில் ஈடுபட்டுவந்தனர்.

ஆனால், பின்லாந்து, சுவீடன், டென்மார்க் ஆகிய மூன்று நோர்ட்டிக் நாடுகள் உட்பட 25 ஐரோப்பிய நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கும் தீர்மானத்தை ஏகமனதாக எடுத்ததை அடுத்து மேற்படி மூன்று நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களும் நடுநிலைப் போக்குடன் கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் தார்மீகத் தகுதியை இழந்து விட்டனர் என்று சுட்டிக்காட்டி, அந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட அருகதையற்றவர்கள் என விடுதலைப் புலிகள் அமைப்பு நோர்வே அனுசரணையாளர்களுக்குத் தெரியப்படுத்தி யிருந்தது.

எனினும், புலிகளின் இந்த முடிவை மீளாய்வு செய்யும்படி கோரிய நோர்வே அனுசரணையாளர்கள், அவ்வாறு மூன்று நாட்டுக் கண்காணிப்பாளர்களையும் மாற்றுவதாயின் அதற்காக குறைந்தது ஆறுமாதகால அவகாசம் வழங்க வேண்டும் எனவும், அதுவரை தற்போது உள்ளவர்கள் தொடர்ந்து பணி யாற்ற அனுமதிக்க வேண்டும் எனவும் கோரியிருந் தனர்.

ஆனால்; மேற்படி மூன்று நாட்டுக் கண்காணிப்பாளர்களையும் மாற்ற வேண்டும் என்பதில் புலிகள் உறுதியாக இருக்கிறார்கள் எனவும், அவர்களை மாற்றுவதற்குக் குறுகிய கால அவகாசமே புலிகள் வழங்குவர் எனவும் செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

அந்த நிலைப்பாட்டில் புலிகள் தற்போது மிகவும் உறுதியாக இருக்கின்றார்கள் எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி டென்மார்க், சுவீடன், பின்லாந்து ஆகிய மூன்று நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களின் இடத்துக்கு புதிய நடுநிலை நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்படவேண்டும் எனப் புலிகள் தொடர்ந்து வலியுறுத்துகின்றனர் எனவும் -

இதற்கு சுமார் ஒரு மாதகால அவகாசத்தை வழங்க புலிகள் இணங்கியுள்ளனர் எனவும் - தெரியவந்தது.

புலிகளின் இந்த நிலைப்பாட்டால் சுவீடன் நாட்டைச் சேர்ந்த கண்காணிப்புக் குழுத் தலைவர் உட்பட 37 பேரின் இடத்துக்குப் புதியவர்களை - அரசு; புலிகள் ஆகிய இரு தரப்புக்கும் ஏற்புடைய புதிய நடுநிலை நாடுகளிலிருந்து - அவசர அவசரமாகத் தேடிப் பிடித்து நியமிக்கவேண்டிய இக்கட்டும், நெருக்கடியும் நோர்வே அனுசரணையாளர்களுக்கு ஏற்பட்டிருப்பதாக அனுசரணைப் பணியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் 'உதயன்'இற்குத் தெரிவித்தன. (க)

System Engineer
Micorsoft அதிபர் Bill Gates வழங்கும் சான்றிதழ்
வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
மேலதிக விபரங்களுக்கு உடனடியாக தொடர்புகொள்க
MCS 324, Palaly Road, Jaffna.
MCP MCSE MCSA

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS
ஐ. நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன் வைத்துள்ளார்கள்.
பதிவுகள் 23.06.2006 இற்கு முன் நேரில்
இலவசக்கணனிப்பயிற்சி
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவ[illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.06.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org